



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2053 சுறவம் நல்லோரை தைத் திங்கள் 5ம் நாள் பதின்மும்மைப் பிறைநாள் (19-01-2023 வியாழக்கிழமை) வெளியீடு +94 21 221 2739


## பெருஞ்சிவனிரவு இம்முறை மாசி 6ம் நாள்



பெருஞ்சிவனிரவு இம்முறை மாசி 6ம் நாள் (18-02-2023) சனிக் கிழமை, சனி கழுவாய் வழிபாடு அன்று நோற்கப்படும். கழுவாய் (பிரதோசம்) மற்றும் சிவனிரவு இம்முறை சேர்ந்து ஒரேநாளில் வருவது மிகவும் சிறப்பானதாகும்.

சிவ சிவ என்றிட சிவகதி தானே.

# தென்னாட்டில் ஆதிரைப் பெருவிழா அருட்காட்சி வழிபாடுகள் ஆதிரையான் திருவீதியுலாவுடன் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது



மார்கழித் திங்கள் திருவாதிரை நாண்மீனுடன் கூடிய நன்னாளில் இவ் விழா கொண்டாடப்படுகிறது. மார்கழி திருவாதிரை நாளில் சிதம்பரத்தில் தம் திருநடனக் காட்சியை சிவபெருமான், பதஞ்சலி முனிவருக்கு காட்டி அருளி னார். ஈசன் தன்னுடைய ஆனந்தத் தாண்டவத்தை காட்டி அருளிய நாளே ஆதிரை அருட்காட்சி நாள் என்று போற் றப்படுகிறது. கொக்குவில் தென்னாடு அருள்மிகு ஐம்பூதநாதர் திருக்கோயி லில் இவ்விழா ஆண்டுதோறும் மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது.

திருவாதிரையின் பெருமையை உணர்த்தும் வகையில் சம்பந்தப்பெரு மான் ஆதிரைநாள்அருட்காட்சியை பார்க்காமல் போனாயோ என்று பதிகம் பாடி பூம்பாவையை உயிர்ப்பித்தார்.

**ஊர்திரை வேலை உலாவும் உயர்மலைக்**
**கூர்தரு வேல்வல்லார் கோற்றங் கோள் சேரிதனில்**
**கார்தரு சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்**
**ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்**



யாழ்ப்பாணம் கொக்குவிலின் கிழக்கே வீற்றிருந்து அருளும், தென்னாடு அருள் மிகு ஐம்பூதநாதர் திருக்கோயிலில் மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னா ளான, மார்கழித் திங்கள் 22ம் நாள் (06.01.2023) திருவாதிரை வழிபாடு மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. அதிகாலை 4.30 மணியளவில் ஐம்பூத நாதர் அருள் வழிபாட்டுடன் ஆரம்பமாகி, காலை 5.00 மணியளவில் ஆடல் வல்லானுக்கு சிறப்புப் பூசைகள் இடம்பெற்று, 5.30 மணியளவில் சிவகாமி அம்மை உடனுறை தில்லைக் கூத்தப் பெருமான் திருவீதி உலாவிற்கு எழுந்த ருளினார்.

தென்னாடு விதியை மாற்றும் விரிச டைப் பெருமான் அடியார் பெருமக் களை காத்தருளும் வண்ணம் ஒவ்வொரு ஆதிரை நன்னாளில் திருவீதி உலா வருவது வழமை. அந்த ஆதிரையானின் அருட் காட்சியை காண எதிர்பாத்திருந்த மக்கள், தங்களது வீட்டு வாயிலில் நிறை கும்பம் வைத்து எம்பெருமானை வரவேற்றார்கள்.

திருவீதி உலாவானது திருவருளுடன் நிறைவுபெற்று காலை 7மணியளவில் சுவாமி இருப்பிடத்திற்கு எழுந்தருளி, ஆதிரை அருட்காட்சி வழிபாடு இடம்பெற்றது. அடியார்கள் அனை வரும் இப்பெரும் அருட்காட்சி கண்டு பெரும் பேறுற்றனர். அதனை தொடர்ந்து அடியார்களிற்கு எம்பெரு மானுக்கு படையலிட்ட பண்டங்கள் அடியார்களுக்கு வழங்கப்பட்டது.

**திருச்சிற்றம்பலம்**

## தென்னாட்டிற்கு வதிவிட ஓதுவாராக திருஎறும்பூர் சிவத்திரு.ப. முருகானந்தம் அவர்கள் நியமிப்பு



யாழ்ப்பாணம் தென்னாடு சிவமடம் மற்றும் ஐம்பூதநாதர் திருக்கோயிலுக்கு, தமிழ்நாடு திருச்சி திருவெறும்பூரில் இருந்து சிவத்திரு.ப. முருகானந்தம் ஓதுவார் வருகை தந்துள்ளார். இவர் இங்கு வதிவிட ஓதுவாராய் இருந்து தென்னாடு ஐம்பூதநாதர் கோயில் திருப்பணிக்கு திருவருள் வேண்டி ஞானவேள்வியும், மற்றும் பாடசாலைகளில் திருமுறை வகுப்புக்களும் செய்து வருகிறார்.

தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயிலானது, முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாட்டினை அடிப்படையாக நிலைநிறுத்தி கற்றளிக்கோயிலாக உருப்பெற வேண்டியும், இலங்கையில் சைவம் பரவவேண்டியும் திருமுறை விண்ணப்பம் செய்யப்பட்டு வருகிறது. அத்துடன் மார்கழித் திருவெம்பாவை காலத்தில், திருவெம்பாவை பாடலுடனான ஊர்வலமானது தொடங்கி வைக்கப்பட்டு, தொடர்ந்து பத்து நாட்களும் இடம்பெற்றது.

### பாடசாலைகளில் திருமுறைப் பயிற்சி

பாடசாலைகளுக்கு சென்று மாணவர்களுக்கு திருமுறைப் பயிற்சி வகுப்புகள் தென்னாடு மடத்தினால் நடாத்தப்பட்டு வருகின்றன. பாடசாலை மாணவர்களிடையே திருமுறையின் பெருமைகளை கொண்டுசேர்க்கும் திட்டமாக முதன்முறையாக இலங்கையில் இந்தப் பயிற்சி நெறி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தில் சான்றிதழுடன் கூடிய முப்பது நாட்கள் பண்ணிசைப் பயிற்சிப் பட்டறை நடைபெறஉள்ளது. இது தொடர்பாக இரண்டாம் பக்கத்தில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**திருச்சிற்றம்பலம்**

## பொங்குவோம் பொங்கவைப்போம் திட்டத்தில் 967 பானைகள் அன்பளிப்பு



ஒசுத்திரேலியா அறம் அறக் கட்டளை மற்றும் தென்னாடு சைவ மாணவர் சபையின் முன்னெடுப்பில் 2019ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட "பொங்குவோம் பொங்கவைப் போம்" திட்டத்தில் இந்த ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் கொடுவாமடு, சவுக்கடி, சித்தாண்டி மாவடிவேம்பு, பலாச்சோலை, ஏறாவூர் குடியிருப்பு, வம்மிவட்டு வான், வாகரை 5ம் வட்டாரம், வெருகல் மற்றும் பொலன் னறுவையிலும், யாழ்ப்பாணம் கொக்குவில், கோண்டாவில் பகுதியிலும், கிளிநொச்சி இந்துக் கல்லூரி மற்றும் பூநகரி நல்லூர் பாடசாலையிலுமாக மொத்தம் 967 பொங்கல் பானை மற்றும் பொதிகள் பொங்கல் பொருட்கள் அடங்கிய பொங்கல் பானைகள் வழங்கப்பட் டன.

தமிழர் திருநாளாகிய பொங்கல் மற்றும் அதுசார் பண்பாட்டினை எதிர்கால சமுதாயத்திற்கு ஊடுகடத்தவும் இயன்றளவு எல்லா வீடுகளிலும் பொங்கல் நடைபெறவேண்டும் என்ற எண்ணப்பாட்டுடனும் இத்திட்டம் உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதற்குப் பல ஒசுத்திரேலிய வர்த்தகர்கள் மற்றும் உலகளா விய குறிப்பாக ஒசுத்திரேலியா பண்பாட்டு ஆர்வலர்கள் நிதியுதவியினை நல்கியிருந்தனர்.

# தென்னாட்டில் வதிவிட தேவாரப் பயிற்சி நெறி ஆரம்பமாகிறது



ஏழிசையாய் இசைப்பயனாய்த் திகழ்பவன் இறைவன். **“பண்காட்டும் இசையானும்”** என்பது திருமுறை. அப்படியாக தமிழில் இறைவனைப் போற்றிப் புகழ்வதற்கு அமுதான திருமுறைகள் இறையருளால் நமக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. அத்திருமுறைகள்தான் இறைவனிடம் நாம் உரையாடுவதாக அமைந்து, நம்மை நல்வழிப்படுத்துகின்றன. பெரும் அருளாளர்கள் பதிவாக்காகப் பாடிப் பரவிய செந்தமிழ் மாலைகளை நாமும் பாடுவதற்கு திருவருள் பெருங்கருணை செய்திருக்கின்றது.

திருமுறைகளைப் பாடுவதெற்கென்று ஒரு முறை இருக்கின்றது. அதுதான் **“பண்”** முறை. பண்ணிசை என்பது தமிழிசையாகும். அதனை முறையாகப் பயின்றவர்களே ஓதுவார்கள் ஆவர். அந்த வகையில் யாழ்ப்பாணத்தின் கொக்குவில் பகுதியில் அமைந்துள்ள தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தில் சான்றிதழுடன் கூடிய பண்ணிசைப் பயிற்சி முப்பது நாட்கள் வழங்கப்பட உள்ளது. பண்ணிசைப் பயிற்சியை தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தின் வதிவிட ஓதுவார், தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்துள்ள சிவத்திரு. ப.முருகானந்தம் ஓதுவார் அவர்கள் வழங்குவார்கள்.

மேற்படி பயிற்சி வகுப்பானது, வருகின்ற தைத் திங்கள் 18ம் நாள் (01-02-2023) அன்று தொடங்கி மாசித் திங்கள் 18ம் நாள் (02.03.2023) வரை என முப்பது நாட்கள் நடைபெற உள்ளது. தங்கிப் பயில்வதற்கு ஏதுவாக உணவுடன் கூடிய தங்குமிட வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே ஆர்வமுடையவர்கள் தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தினைத் தொடர்புக் கொண்டு பண்ணிசை வகுப்பில் சேர்ந்து நமது பாரம்பரியமிக்க தமிழிசையாம் பண்ணிசையைக் கற்று பரமன் புகழ்ப் பாடிட அன்போடு அழைக்கின்றோம்.

திருச்சிற்றம்பலம்

**தென்னாடு செந்தமிழாகம சிவமடம்**
**+94 21 221 2739, +94 (70) 770 1111**

# ஆறுமுகநாவலர் தோன்றி 200 ஆண்டு நிறைவு மாநாடு


சீர்வளர்சீர் ஆறுமுகநாவலர் அவதரித்து 200 ஆண்டு நிறைவு மாநாடு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டிலும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், சீர்வளர்சீர் ஆறுமுகநாவலர் சபை, யாழ்ப்பாண மாநகரசபை சமய விவகாரக் குழு ஆகியவற்றின் இணை ஏற்பாட்டிலும் யாழ்ப்பாணம் நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடைபெற்று நிறைவுற்றது.

சீர்வளர்சீர் ஆறுமுக நாவலர் மணி மண்டபத்திலே ஆன்மீக அரங்கின் தொடக்க நிகழ்வுகள் கடந்த கார்த்திகைத் திங்கள் 28ம் நாள் (14-12-2022) புதன்கிழமை ஆறுமுக நாவலர் குருபூசை நிகழ்வுகளோடு ஆரம்பமாகி, மார்கழித் திங்கள் 3ம் நாள் (18-12-2022) மாலை இறுதி நிகழ்வுகள் நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் இடம்பெற்றன.

குறித்த நிகழ்வில் நாவலர் பெருமானின் நினைவாக சமூக செயற்பாட்டாளர்களுக்கு நாவலர் விருதும் வழங்கி வைக்கப்பட்டது. மேலும் இறுதி இரண்டுநாள் நிகழ்வில் குமாரவயலூர் ”திருமுறைக்கலாநிதி”, முனைவர். சிவத்திரு. திருஞான பாலச்சந்திரன் ஓதுவார் (தேவார உதவிப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்) அவர்களின் திருமுறை விண்ணப்ப நிகழ்வும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் சனாதிபதியின் இந்து சமய விவகாரங்களுக்கான இணைப்பாளர் கலாநிதி ராமச்சந்திரன் பாபு சர்மா குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் தவத்திரு. சீர்வளர்சீர் சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், தருமை ஆதீன திருச்சி மௌனமட மற்றும் இலங்கை திருக்கேதீச்சர கிளைமட தம்பிரான் தவத்திரு. மீனாட்சி சுந்தரம் சுவாமிகள், சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சிவத்திரு. ய.அநிருத்தனன், செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன், சமயப் பெரியார்கள், கல்விமான்கள், அறநெறிப் பாடசாலைச் சமூகத்தினர், பல்கலைக்கழக சமூகத்தினர் எனப் பலரும் பங்கெடுத்திருந்தனர்.

திருச்சிற்றம்பலம்




# யாழ்ப்பாண நுழைவாயில் செம்மணீச்சரத்தில் கடவுள் மங்கல நன்னீராட்டு

யாழ்ப்பாண நுழைவாயிலாகிய நல்லைக் கந்தன் நுழைவாயில் அமையப் பெற்றுள்ள செம்மணிச் சந்தியானது, அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு உயிர் காவு வாங்கும் பிரதேசமாகவே மக்களால் பார்க்கப்பட்டு வந்தது. ஏறத்தாழ ஐம்பது வருடங்களுக்கு முன்னர் உப்பளத்தில் தொழில் புரிவோர்களுடன் மில்க்வைட் கனகராஜன் அவர்களும் இணைந்து பிள்ளையார் கோயில் ஒன்றை நிறுவி வழிபாடு ஆற்றி வந்தனர். பிற்பட்ட காலங்களில் ஏற்பட்ட போர் நிலைமைகளால் கோயிலானது அழிவடைந்து போயிற்று. பின்னர் இராவணனும் மண்டோதரியும் வழிபட்ட சிவலிங்கத்தை, எங்கள் பூமி சிவபூமி என்பதை அடையாளப்படுத்துவற்கு, யாழ்ப்பாண நுழைவாயிலில் 2019ம் ஆண்டு இளைய சைவத் தன்னார்வலர்கள் பலர் இணைந்து நிறுவியிருந்தார்கள். அவ் இலிங்கப்பெருமானே இன்று வரை கம்பீரமாக யாழ் நுழைவில் நின்றருளுகின்றார். பெருவாசகமான திருவாசகம் அருளிய மாணிக்கவாசகர் “சின்னங்கள் கேட்ப சிவன் என்றே வாய்திறப்பாய்” என்று குறிப்பிட்டது போல, யாழினுள் நுழைபவர்கள் அனைவரும் “சிவசிவ” என்று பரம்பொருளை பாடி சிவசிந்தையுடன் நுழைவதற்கும், வெளியே செல்பவர்கள் அனைவரும் ”சிவசிவ” என்று பரம்பெருளுக்கு நன்றி கூறிப் போற்றி செல்வதற்கும் வழிவகுத்திருந்தது எங்கள் இளையோர்களின் இப்பெரும் முயற்சி.

இதனைக் கருத்தில் கொண்ட சிவபூமி அறக்கட்டளை அமைப்பின் தலைவர், கலாநிதி செஞ்சொற்செல்வர் சிவத்திரு. ஆறுதிருமுருகன் ஐயா அவர்கள், இவ் இலிங்கப்பெருமானிடத்தே திருப்பணிகள் மேற்கொண்டு திருக்கோயில் அமைக்க எண்ணம் கொண்டார். அதன் விளைவாக சிவபூமி அமைப்பினர், சுவிஸ் நாட்டில் வசிக்கும் அன்னலிங்கம் தம்பதிகளின் நிதிப்பங்களிப்போடு இத்திருப்பணியை ஆரம்பித்து இருந்தனர். செம்மணிச் சந்தியில் மூன்று ஏக்கர் நிலப்பரப்பை அரசாங்கத்தினரிடம் வாங்கி, 22 நாட்கள் திருப்பணிகள் மேற்கொண்டு கருங்கல் வேலைப்பாடுகளுடன் கூடிய எழில்மிகு கோயிலாக எம்பெருமானுக்கான வழிபாட்டுத்தலம் உருவாகியது. தொடர்ந்து தென்னாட்டு



சிற்ப்பாசிரியர், கிளிநொச்சியை சேர்ந்த சிவத்திரு. வினோத் அவர்களின் கைவண்ணத்தில் ஏழு அடி கருங்கல் சிவலிங்கமானது செய்விக்கப்பட்டு, கடந்த கார்த்திகைத் திங்கள் 22ம் நாள் (07-12-2022) திங்கள்கிழமை கார்த்திகைத் தீபத்திருநாளாகிய நிறைமதி நாளில், திருவண்ணாமலையில் பெருந்தீப சோதியாய் எம்பெருமான் எழுந்தருள, செம்மணியில் அரும்பெரும் சோதியாகிய எங்கள் மெய்ப்பொருளை நிலைப்படுத்தி திருகுடமுழுக்குச் செய்யப்பட்டது.

இத்திருக்குடமுழுக்கு பெருவிழாவை ஆறுதிருமுருகன் ஐயா, ரிஷி தொண்டுநாதன் ஐயா, வேதவித்தியாசாகர் சுவாமிகள் ஆகியோர் இணைந்து தமது திருக்கரங்களினாலேயே ஆற்றி இருந்தமை போற்றுதலுக்குரியதாகும். வேத, ஆகம கிரியை முறைகளைத் தவிர்த்து, தாமே வேள்விகள் மேற்கொண்டு இறைவன் உள்நின்று உணர்த்தும் அன்பாகிய நெறியில் நின்று வழிபாடு ஆற்றியிருந்தமை ஓர் எடுத்துக்காட்டாக அமைகின்றது. யாழ்ப்பாணத்தை அண்மிப்போர்கள் முதலில் காணும் வகையில், பிரதான வீதியில், சாவகச்சேரி பேருந்து நிலையாக வளாகத்தில், தென்னாடு சிவமடத்தின் சைவ மாணவர் சபையினரால் வாரிவனேசுவரர் எனும் கற்றளிக்கோயில் அமைக்கப்பட்டுள்ளதைப் போல, யாழ்ப்பாணத்தின் தொடக்கத்தில் அடியார் பெருமக்கள் அனைவரும் நீர் ஊற்றி மெய்யன்போடு வழிபடுவதற்கு ஏற்ப இத்திருக்கோயில் அமைப்பெற்றுள்ளது. இந்த தொடக்கமானது சைவத்தமிழ் பிரதேசமெங்கும் பரவி, அடியார்கள் தாமாக பூசனை செய்து வழிபடக்கூடிய சிவ வழிபாட்டுத்தலங்கள் மிளிர எம்பெருமான் திருவருள் புரிவாராக.


செம்மணச்செல்வியின் துயர்துடைக்க எம்பெருமான் தன்னிலை இறங்கி புட்டுக்கு மண் சுமந்ததுபோல, யாழ் மண்ணின் மகத்துவம் காத்திட, செம்மணியில் வந்து நிலைகொண்டுள்ள எங்கள் பரமனின் திருவருள் பெற்று உய்வோமாக.

**”என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே”**

திருச்சிற்றம்பலம்




**சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,**
ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
0715588737, aathan@thennadu.org



# விழித்துக்கொள்வோம்!

உலகம் மிக வேகமாக சுழன்றுகொண்டிருக்கிறது. காலம் கடுகதியில் விரைகின்றது. மக்கள் தம்மைத் தாம் கவனித்துக்கொள்வதற்கே நேரமின்றி, வாழ்க்கை இயந்திரத்தை இயக்கிக் கொண்டுள்ளனர். எதிர்காலம் என்ற ஒன்று இருக்கின்றது, அதில் அடுத்த தலைமுறை வாழ வேண்டும் என்றி சிந்தனை பெரும்பாலும் அற்றுவிட்டது. போதைக்கு அடிமையான எதிர்கால தலைமுறை, தினமும் கண்முன்னே இறந்து போவதை காண்கின்றோம். வேகப் பிரயாணமும் விபத்தும் இளையவர்களின் உயிரைக்குடிக்கின்றது. வேலியே பயிரை மேய்ந்த கணக்காய் குடும்பவன்முறைகளும், சமூக பிறழ்வுகளும் அதிகரிகத்த ஒரு சமூகமாக எம் தமிழ் சமூகம் மெல்ல மெல்ல மாறிவருகின்றதோ, என எண்ணும் போது மனம் மிகக் கலங்கு கின்றது.

இந்த கலக்கத்தை தீர்க்க என்ன வழி உண்டு? சமூகத்தில் பரவும் இந்த பொல்லாத நோய்க்கு என்ன மருந்து? எம் இளையவர்களின் உயிர்குடிக்கும் பேயை ஓட்ட என்ன மந்திரம்? என்று நாம் தேடினால் ‘ஆன்மீகம்’ என்ற ஒற்றை நம்பிக்கையைத் தவிர, திருமுறைகள் என்ற அரு மருந்தை தவிர வேறு தீர்வு இல்லை எம்மிடம். “மருந்து வேண்டில் இவை, மந்திரங்கள் இவை” என்ற ஞானசம்பந்தர் பாடியதன் பொருள், இந்த தளத்திலும் பொருந்துவது காணத்தக்கது. ஆங்கிலப் புத்தாண்டுக்குள் நாம் எல்லோரும் பயணிக்கத் தொடங்கிவிட்டோம். அவ்வாறே மேலத்தேய நவீன கலாச்சாரத்திலும் மூழ்கி, எம்மையும் எம் தலைமுறைகளையும் பலி கொடுக்கவும் துணிந்து விட்டோம். ஆண்டுகள் புதிது புதிதாய் வரவர எம் மகத்தான பழமைகளின், பத்தி மார்க்கத்தின் வேர்களைத் தொலைத்துவிட்டோம். மேலத்தேயமும் தேடி அலைந்த மெய்யியல் இங்கு தாள் உண்டு என்ற உண்மையை எம் தலைமுறைக்கே சொல்லத் தவறி விட்டோம்.

இங்ஙனம், தவறிவிட்டோம், தொலைத்துவிட்டுடோம் என்று புலம்புவதற்கு பதில் தீர்வுகளைத் தேட முற்படுவது தானே காலத்தின் தேவை. அது தானே நம்மைக் காக்கும் கருவி செய்ய மூலம்! அந்தத் தேடலில் நாம் கண்ட எம் பத்திமார்க்கத்தை எப்படி பிள்ளைகளிடம் கொண்டு சென்று சேர்ப்பது? பாடசாலைகள் வெறுமனவே அறிவுக்கு தீனி போடும் புத்தகப் பூச்சிகளை வளர்க்கும் கட்டடக் கூடுகளுக்கு கொடுக்கும் உணவு தானே அவர்களை தவறான வழியில் போகாமல் தடுக்கும். புத்தகங்களைத் தாண்டி அவர்கள் பார்க்கும் பார்வைகள் தானே நாளைய நம் சமூதாயத்தை வளப்படுத்தும். கல்வி முக்கியமானது தான், ஆனால் அது சுயநலத்தை வளர்த்துவிடும், பத்தி நெறி கலக்காத கல்வியால் எந்தப் பயனும் இல்லை.

பாடசாலைகளில் வழிபாட்டு நேரத்தை மட்டுப்படுத்துவதும், சமய கலாசார விழாக்களைப் புறக்கணிப்பதும், காலம் கடந்து வந்து எங்கள் கழுத்தையே இறுகப் பிடிக்கும் என்பதை இன்றைய கல்விச் சமூக தலைமைத்துவங்களை, தம் வசம் வைத்திருப்பவர்கள் உணர்ந்தால் நன்று. காலம் கடந்த ஞானம் பயனற்றது. இயந்திர வாழ்க்கைக்கு இயந்திர மனிதர்களை தயாரித்து பணமீட்டும் பாங்குக்காக மட்டுமே சமூகத்துக்கு தரப்போகின்றோமா? இல்லையேல், மனிதர்களாக சிந்தனை ஆற்றலோடு பிறந்த எம் பயனை முழுதாய் அனுபவித்து வாழ்க்கையை வாழப் போகும் நல்ல இளைய ஆற்றலாளர்களை இந்த சமூகத்துக்கு வழங்கப் போகின்றோமா? என்பது தான் இந்த ஆண்டில் நாம் எடுக்கவேண்டிய முடிவாகும்.

மேற்சொன்ன இரண்டாம் வகைக்குரிய ஆற்றலாளர்களின் மனங்களை செம்மைபடுத்து வதற்கு தென்னாடு செந்தமிழாகம சிவமடம் என்றும் முன்னிற்கிறது. அண்மையில் நடைபெற்ற மார்கழிப் பெருவிழா, தக்க சான்று பண்டைக்காலம் தொட்டு நம் மண்ணும் தமிழகத்துக்கும் இருந்த சமய கலாசார சித்தாந்த உறவை மீண்டும் கட்டியெழுப்பி பத்தி நெறிபரிமாற்றம் நிகழ்வதற்கான முதற்புள்ளியாய், இரண்டாவது ஆண்டாக இடம்பெற்ற மார்கழிப் பெருவிழா அமைந்துது எம் தவப்பயன், இந்தச் சிறு நூலைப் பற்றி, எம் தலைமுறையை காத்து நற்கரைக்கு அழைத்துச் செல்லும் வலிமையான பாலமொன்றை அமைப்பது நம் எல்லோருடைய கடமையுமாகும். இப்போதும் நாம் விழித்துக்கொள்ள வில்லை என்றால் காலமும் எம்மைக் கைவிட்டுவிடுவோம் என்ற எச்சரிக்கையோடு நிறைவு செய்கின்றேன்.

**தக்கதொரு பொருளுளதாம்**
**மிக்கு துயர் தீர்த்து மீள,**
**நெக்குருகி வழிபடும் பத்திநெறி காட்டும்**
**சித்தாந்த தேனமிர்தம் தெரிந்து**
**பொய்நாட்ட இருள் நீங்கி விழிப்போம்!**

**திருச்சிற்றம்பலம்**




**சிவத்திரு.யாழவன் சிவவேதன்,**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (70) 770 1111, sivavethan@thennadu.org



# கவர்ச்சிக்கான வழிபாடுகள் காக்குமா சைவத்தை!

ஊழ்வினையின் அடிப்படையிலே சைவமாம் சமயம் சாருகின்ற வாய்ப்பு அரிதிலும் அரிதானதென்று சித்தாந்தம் பேசுகின்றது. சைவர்கள் என்ன கொடுவினை செய்தார்களோ தெரியவில்லை, அந்த வாக்கு பொய்ப்பை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

சிவபூமியின் தலைப்பீடமாம் யாழ்ப்பாணம் அண்மைய காலம் முழுவதும் ஐயப்ப அடியார்களால் நிரம்பி வழிகிறது. வீதிகள் தோறும் கருமை நிற வேட்டிகளுடனும், ஐயப்ப மாலைகளுடனும் மக்கள் கூட்டம் பொங்கி வழிகின்றது.

அதிலும் குறிப்பாக இளைஞர் சமூகத்தை இவ்வழிபாடு ஆட்கொண்டேவிட்டது. இளைஞர்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்குடனும், பெருமெடுப்புடனும் ஐயப்பன் வலம் வந்து கொண்டி ருக்கின்றார். யானையை அழைத்து வந்து ஊர்வலம் எடுப்பித்த நிகழ்வு கூட அண்மையில் ஐயப்ப அடியார்களால் அரங்கேறியிருக்கிறது. சில இளைஞர்கள் வெற்றுக் கவர்ச்சிக்காக இவ்வழிபாட்டினை மேற்கொள்ளும் நிலை இன்றைய யாழ்ப்பாணத்தில் பரவியிருக்கிறது. வழிபாடு என்பது அன்பிலிருந்து துளிர்க்க வேண்டும், வெற்றுக் கவர்ச்சிக்காக மேற்கொள்ளும் வழிபாடு செத்த பிணத்திற்கு ஊற்றும் பாலுக்கு ஒப்பானது.

ஐயப்ப வழிபாடு இயற்றப்பட்ட அதே காலப்பகுதியில் தான் திருவெம்பாவை வழிபாடும் நடைபெற்றது. ஐயப்ப வழிபாட்டின் நிலைமை தலைகீழாகவே திருவெம்பாவை வழிபாட்டில் காணப்படுகிறது. ஆங்காங்கே ஒன்றிரண்டு அடியவர்களைத் தவிர ஈ, காக்கையினைக் கூட அதிகாலையில் காணவில்லை.

முன்பெல்லாம் திருவெம்பாவைக் காலம் என்றாலே திருவாசகப் பாடல்களாலும் அடியார் ஊர்வலங்களாலும் யாழ்ப்பாணம் நிரம்பி வழியும். என்னுடைய பாட்டியார் சிறுவயதில் இருந்த போது விரதம் என்றாலே அக்கால யாழ்ப்பாணத்தில் திருவெம்பா வையும், கந்தன் கவின் அறுமைப் பெருநாளாகிய கந்த சட்டியும் தான். இன்று அப்பெரு விரதங்கள் எல்லாம் மழுங்கடிக்கப்பட்டு எத்தனையோ புதிய வழிபாடுகள் போற்றப்படுகின்றன.

ஐயப்ப வழிபாட்டை யாரும் குறை கூறவில்லை. அன்போடும் பத்தியோடும் நடாத்தப் படுகின்ற போது அதுவும் அழகு தான். ஆனால் ஏலவே இருந்த வழிபாட்டியலைச் சிதைத் தெறிந்து வெற்றுக் கவர்ச்சிக்காக அவ்வழிபாடு எழுவதையே ஏற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது.

ஒண்ட வந்த பிடாரி ஊர்ப்பிடாரியைக் கெடுத்தது என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அந்தப் பழமொழிக்கு இதை விடச் சிறந்த உதாரணம் எதுவும் இல்லை. பசியென்று வந்தவனை வீட்டிற்குள் அழைத்து விருந்தளிக்க அவன் வீட்டுக்காரர்களை துரத்தி விட்டு வீட்டிற்குள் தங்கினானாம். அதைப் போல ஐயப்ப விரதம் தங்காதவரை மகிழ்ச்சி தான். சைவர்களே விழித்துக் கொள்ளுங்கள். சைவ சமயம் எனும் போர்வாள் மழுங்கிக் கொண்டு இருக்கின்றது. அதைத் தேய்த்து மிளிர வைக்க வேண்டிய கடமை அனைத்து சைவர்களுக்கும் உண்டு. சைவத்தை மீட்பதற்காக தனது திருமுலைப்பாலினை சுரந்து வழங்கிய அம்மையையும் அப்பனையும் மீண்டும் உதவுமாறு வேண்டுவதைத் தவிர வேறு வழியில்லை. சைவமாம் சமயத்தைக் காக்க காலங்கள் தோறும் கட்டாயம் அபரமுருகன் திருஅவதாரஞ்செய்வான். தற்போதும் திருஅவதாரம் செய்ய வேண்டுமென்று எம்பெருமானின் பாதக்கமலங்களை வழுத்துவோம்.

**வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்**
**கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க**
**நான் மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க**
**மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்**

**திருச்சிற்றம்பலம்**

# சைவத்தை அறிமின் சிவத்தை அறிமின்



**1. சைவ சித்தாந்தம் என் பதன் பொருள் என்ன?**

சைவம் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம். சித்தாந்தம் என்பது சிந்தித்துக் கண்டறிந்த முடிவான உண்மை. அந்தம் - முடிவு ஆன்மீகம் தொடர்பான பல்வேறு கருத்துக்களையும் ஆராய்ந்து சிந்தித்து முடிந்த முடிவாகக் காணப்பட்டது சைவ சிந்தாந்தம், சைவசித்தாந்தம் சைவசமயத்தின் தத்துவம்

**2. சைவ சமயத்தில் அதன் தத்துவத்தைத் தவிர வேறு எவை அதன் கூறுகளாக உள்ளன? அவற்றை விளக்குக?**

சைவ சமயத்தில் பிற சமயங்களிலும் தத்துவம், கிரியைகள், புராணங்கள் ஆகியவை முக்கிய கூறுகளாக உள்ளன.

சைவ நெறியில் ஈடுபாடு கொள்ளச்செய்து ஆன்மீக வளர்ச்சிக்குத் துணை செய்பவை சைவக் கிரியைகள். சைவசமய உண்மைகளை கதை மூலம் உணர்த்துபவை சைவம் சார்ந்த புராணங்கள் சைவசமய உண்மைகளை அறிவியல் நோக்கில் விளக்குவது அதன் தத்துவமான சைவ சித்தாந்தம். இவை தவிர, பத்தி வழியில் ஆன்ம வளர்ச்சிக்குத் துணை புரியும் சாதனங்களான திருமுறைகள் போன்ற நூல்களும் சைவத்தின் கூறுகளாக உள்ளன.

**3. சைவசித்தாந்தம் எதனை விளக்குகிறது?**

நான் யார்? இறைவன் யார்? எனக்கும் இறைவனுக்கும் உள்ள உறவென்ன? நாம் காணும் உலகும் உலகப்பொருட்களும் எத்தகையன? எமது குறை என்ன? குறையற்ற வாழ்வுக்கு வழி என்ன? இவை போன்ற கேள்விகளுக்கு விடையளித்து விளக்கம் தருகிறது. இந்த வகையில் இது எம்மைப் பற்றிய தத்துவமாக உள்ளது. இதனால் இதனை நாம் அறிவது அவசியமாகிறது.

**4. இறை, உயிர், குறித்த சைவசித்தாந்தக் கொள்கை என்ன?**

இறைவன் ஒருவனே. எல்லா நலன்களுக்கும் நிறைந்தவன் அவன். அவனைச் சிவம் என்றும் பதி என்றும் சிந்தாந்தம் கூறுகிறது. சிவம் என்ற சொல் செம்பொருள் என்ற பொருள் கொண்டது. பதி என்பதற்கு தலைவன் என்று பொருள்.

உயிர்கள் பல. உயிர்களும் இறைவனைப் போல் அனாதியானவை. உயிர்கள் இயல்பாகவே குறையுடையன. அவற்றுக்குக் கட்டாக இருந்து அவற்றின் ஆற்றல்களை வெளிவரமுடியாமல் தடுப்பது இக்குறை. இதனை ஆணவம் என்று சைவ சித்தாந்தம் கூறும்.

**5. ஆணவத்தைப் போல் வேறு குறைகளும் உண்டா?**

ஆணவம் மலம் என்றும் பாசம் என்றும் கூறப்படும் மலம் என்றால் அழுக்கு என்று பொருள்படும். பாசம் என்பது கட்டு என்ற பொருள் தரும். ஆணவப் பிடியிலிருந்து உயிர் விடுபடுவதற்காக இறைவன் கன்மம், மாயை என்ற இரு பொருள்களை உயிருக்கு ஊட்டுகின்றான். இவையும் உயிருக்கு ஒரு வகையில் கட்டாக உள்ளன. இதனால் இவற்றையும் மலம் என்று கூறுவர். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றும் மும்மலம் எனப்படும்.

**6. முப்பொருள் என்று சைவ சித்தாந்தத்தில் கூறப்படுவது என்ன?**

இறை, உயிர், தளை என்பன முப்பொருள் என்று கூறப்படும். தளை, பாசம் என்பன ஒரு பொருட்சொற்கள் முப்பொருள்களையும் அறிந்தால், அனைத்தையும் அறிந்தாகும். சான்றோர்கள் இதனை ஆய்ந்து அறிதல் பயனுள்ளது. இதனை கந்தபுராணம் பின்வருமாறு விளக்கும்.

**"சான்றவர் ஆய்த்திடக் தக்க வாம்பொருள்
மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன
ஆன்றதோர் தொல்பதி ஆருயிர்த் தொகை
வான்றிகழ் தளையென வகுப்பர் அன்னவே"**

**7. சைவ சித்தாந்தக் கருத்துக்கள் எந்த நூல்களில் உள்ளன?**

மெய்கண்ட சாத்திரங்கள் என்று கூறப்படும் பதினான்கு நூல்களில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் உள்ளன. இந்த நூல்கள் தமிழிலே எழுதப்பட்டவை. இவையே சைவசித்தாந்தத்துக்கு ஆணை நூல்களாக (பிரமாணமாக) உள்ளன.

**8. இவற்றைவிட வேறு நூல்களில் சைவசித்தாந்தக் கருத்து இல்லையா?**

வேதங்கள், சைவ ஆகமங்கள், பழந்தமிழ் நூல்கள், திருமுறைகள் ஆகியவற்றிலும் சைவசித்தாந்தக் கருத்துக்கள் உள்ளன.

**9. அப்படியானால், மேற்கூறப்பட்ட பதினான்கு தமிழ் நூல்களை மட்டும் சைவசித்தாந்த ஆணை நூல்களாகக் கொள்வதன் காரணம் என்ன?**

வேத இலக்கியங்களில் சைவத்துக்கு உடன்பாடாற்ற கருத்துக்களும் ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களும் உள்ளன. இந்திய தத்துவங்கள் பலவற்றுக்கும் பொதுவாக உள்ளவை வேதங்கள். சைவசித்தாந்த உண்மைகளும் பொதுவாக இவற்றில் காணப்படுகின்றன.

ஆகம நூல்கள் சைவம், வைணவம், சாக்தம் போன்ற சமயங்களுக்கு உரியனவாக உள்ளன. சைவ ஆகம நூல்களில் சைவசித்தாந்தக் கருத்துக்கள், வேத நூல்களை விடத் தெளிவாகவும் முரண்பாடுகளின்றியும் உள்ளன. இதனால் சைவத்துக்கு வேதம் பொது, ஆகமம் சிறப்பு என்று திருமூலர் போன்ற ஞானிகள் கூறியிருக்கிறார்கள்.

தொல்காப்பியம், திருக்குறள் போன்ற பழந்தமிழ் நூல்களில் சித்தாந்தக் கருத்துக்கள் பரவலாக உள்ளன. திருமுறைகளிலும் இவை உள்ளன. பழந்தமிழ் நூல்கள், திருமுறைகள், வடமொழியிலுள்ள வேதாகம நூல்கள் ஆகியவற்றிலுள்ள சைவசித்தாந்தக் கருத்துக்களின் தொகுப்பாகப் பதினான்கு மெய்கண்ட சாத்திர நூல்கள் உள்ளன. இதனால் இவையே சைவ சித்தாந்த ஆணை நூல்களாகக் கொள்ளப்படுகின்றன.

மேலும் வேதாகம நூல்கள் அனைத்தும் இன்று கிடைப்பதில்லை. இறையருளால், அவற்றிலுள்ள கருத்துக்கள், மெய்கண்ட சாத்திரங்கள் என்ற தமிழ் நூல்களில் தரப்பட்டுள்ளன. இவற்றை எழுதிய ஞானிகள் இறையருள் பெற்ற அருளாளர் என்பது குறிப்பிடத்தக்கது

திருச்சிற்றம்பலம்

**மூலம் - சைவ சித்தாந்த வினாவிடை (கலாநிதி க. கணேசலிங்கம்)**

# வடக்கு, கிழக்கு, மேற்கினை முன்னிலைப்படுத்தி ஐந்து இடங்களில் சைவம் போற்றும் மார்கழிப் பெருவிழா இடம்பெற்றது

சைவத்தமிழ் பெருமக்களின் வாழ்வியலும் வழிபாடும் ஒன்றிணைந்து ஆதிரையானின் அருள்பேசிப் போற்றிடும் அற்புதத் திங்கள் மார்கழியாகும். அத்தகைய மார்கழியின் மகத்துவம் உணர்ந்து, மார்கழியை சிறப்பிக்கும் முகமாகவே மார்கழிப் பெருவிழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றது. தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் மார்கழிப் பெருவிழாக்கள் நடத்தப்பட்ட போதும், ஈழத்திருநாட்டில் கடந்த வருடம் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும், சைவ மாணவர் சபையும் யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக **'மார்கழிப் பெருவிழா'** எனும் கருத்தாக்கத்தில் சிவத்தின் மற்றும் சைவத்தின் பெருமைகளை திருமுறைகள் வழி எடுத்தியம்பும் பிரமாண்ட விழாவாக, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இரு நாட்கள் நான்கு அரங்குகளாக ஒழுங்குபடுத்தி நடாத்தி தொடக்கி வைத்திருந்தமை அனைவரும் அறிந்ததே.

**திருமுறையே சைவநெறிக் கருவூலம் தென்தமிழின் தேன்பாகு ஆகும்**
**திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம்**
**திருமுறையே நடராசன் கரம் வருந்த எழுதியருள் தெய்வ நூலாம்**
**திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய் மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்**


கடந்த வருடம் நடைபெற்ற மார்கழிப் பெருவிழாவின் திருவருட் பயனாக, ஈழத்திருநாட்டின் பல பகுதிகளில் மார்கழிப் பெருவிழாவை நடத்துவதற்கு சைவ அன்பர்கள் முன்வந்தனர். அதனடிப்படையில் வடக்கு, கிழக்கு, மேற்கு என சைவத்தமிழ் அடியார்கள் பரவி வாழும் பிரதேசங்களை முன்னிலைப்படுத்தி யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு, திருகோணமலை, சம்பூர் என ஐந்து இடங்களில் அடுத்தடுத்த நாட்களாக மார்கழிப் பெருவிழா இடம்பெற்றது. **மேலும் இப்பெருந்திருவிழாப் பயணத்தில், தருமை ஆதீன திருச்சி மௌனமட மற்றும் இலங்கை திருக்கேதீச்சர கிளைமட தம்பிரான் தவத்திரு. மீனாட்சி சுந்தரம் சுவாமிகள் அவர்களும் கலந்துகொண்டு அருளாசிகளை வழங்கியிருந்தார். அவர்களோடு தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்திருந்த, குன்றத்தூர் தருமையாதீனப் புலவர், "திருமுறைக்களஞ்சியம்", சிவத்திரு. எம்.கே. பிரபாகரமூர்த்தி அவர்களும், குமார வயலூர் "திருமுறைக்கலாநிதி", முனைவர். சிவத்திரு. திருஞான பாலச்சந்திரன் ஓதுவார் (தேவார உதவிப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்) அவர்களும் இத்திருவருள் பயணத்தில் இணைந்து சிறப்புரைகள், திருமுறை விண்ணப்பங்களை வழங்கி அடியார் பெருமக்களை திருவருள் வெள்ளத்தில் திளைக்கச் செய்திருந்தனர்.**

### மார்கழிப் பெருவிழா - கொழும்பு

கொழும்பு சைவநெறிக் கழகமும் யாழ்ப்பாணம் தென்னாடு செந்தமிழாகம சிவமடமும் இணைந்து, **"சைவம் பேணுதும்"** என்ற கருப்பொருளில் மார்கழியை சிறப்பிக்கும் பெருவிழாவாக, 'சிவநெறி அரங்கும் சிவகீதை நூல் அறிமுக விழாவும்' என்ற நிகழ்வை நடாத்தியிருந்தனர். இந்நிகழ்வானது மார்கழித் திங்கள் 5ம் நாள் (20.12.2022) செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில், கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் சிறப்பாக நடந்தேறியிருந்தது.

இந்நிகழ்வானது, திருவிளக்கேற்றல் மற்றும் அம்பலவாணர் அருள் வழிபாடு என்பன இடம்பெற்று, தொடர்ந்து விடைக்கோடிச் செல்வர் சிவத்திரு. தனபாலா ஐயா அவர்கள் நந்திக்கொடி ஏற்றி வைக்க, திருவருள் பெறுக ஆரம்பமாகி இருந்தது. மேலும் வரவேற்பு உரை - சித்தாந்தரத்தினம் திருமதி செ. உதய கௌரி (பிரதித் தலைவர் - இலங்கை சைவநெறிக் கழகம்), அருள் உரை - தருமை ஆதீன திருச்சி மௌனமட மற்றும் இலங்கை திருக்கேதீச்சர கிளைமட தம்பிரான் தவத்திரு. மீனாட்சி சுந்தரம் சுவாமிகள், திருமுறைவிண்ணப்பம் - குமாரவயலூர் "திருமுறைக்கலாநிதி", முனைவர். சிவத்திரு. திருஞான பாலச்சந்திரன் ஓதுவார் (தேவார உதவிப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்), சமகாலத்தில் சைவசமயம் (காணொளி விளக்கம்) - சிவத்திரு. வி. துலாஞ்சன் (பொதுச்செயலாளர் - இலங்கை சைவநெறிக் கழகம்), சிறப்புரை - குன்றத்தூர் தருமையாதீனப் புலவர், **"திருமுறைக்களஞ்சியம்"**, சிவத்திரு. எம்.கே. பிரபாகரமூர்த்தி (தலைப்பு - **"சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்"**), சிவகீதை அறிமுக உரை - வைத்தியர் சிவத்திரு. ஈசான தேசிகர். கி. பிரதாபன் (தலைவர் - இலங்கை சைவநெறிக் கழகம்), சிறப்பு பிரதிகள் வழங்கல், நன்றி உரை - சிவத்திரு. சி. வினோதரூபன் (பிரதிச் செயலாளர் - இலங்கை சைவநெறிக் கழகம்) என்ற ஒழுங்கில் நிகழ்வுகள் அரங்கேறி சிறப்பாக நடந்தேறியிருந்தது.

கொழும்பு மண்ணில் இத்தகையதாக தம்பிரான் சுவாமிகள் உட்பட தமிழ்நாட்டு திருமுறை வித்தகர்கள், ஈழத்துப் பெரியோர்கள் என பலரும் சங்கமமாகிய முதல் பெருவிழாவாக இந்நிகழ்வு அமையப் பெற்றிருந்தது. இப்பெருங்கைங்கரிய மானது தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தின் நிறுவுனர், சிவத்திரு. தென்னவன் பார்த்திபன் அவர்களின் சிந்தையின் நிமித்தமே நிறைவேறியிருந்தது. மற்றும் இலங்கை சைவநெறிக் கழகத்தின் தலைவர், வைத்தியர் சிவத்திரு. ஈசான தேசிகர். கி. பிரதாபன் அவர்களின் முயற்சியாலும் அவரது குழுவினரின் ஒத்துழைப்பாலுமே குறுகிய காலத்தில் இந்நிகழ்வானது அரங்கேறி நிறைவடைந்துள்ளது என்று போற்றி மகிழலாம்.




### மார்கழிப் பெருவிழா - திருக்கோணமலை

திருக்கோணமலை அருள்மிகு பத்திரகாளி அம்பாள் திருக்கோயில் குழுவினரும், யாழ்ப்பாணம் தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தினரும் இணைந்து, சிவபூமியின் கிழக்கே **'கோணமாமலையான்'** அமர்ந்து அருளும் திருக்கோணமலை மண்ணில் முதன் முதலாக மார்கழியைச் சிறப்பிக்கும் 'மார்கழிப் பெருவிழாவை' நடத்தியிருந்தனர். இந்நிகழ்வானது திருகோணமலை அருள்மிகு பத்திரகாளி அம்பாள் திருக்கோயில் மண்டபத்தில், மார்கழித் திங்கள் 6ம் நாள் (டிசம்பர் 21) புதன்கிழமை மாலை 5.30 மணி தொடக்கம் 8.30 மணி வரை இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வானது, திருக்கோணமலை அருள்மிகு பத்திரகாளி அம்பாள் திருக்கோயிலில் வழிபாட்டுடன் ஆரம்பமாகி இருந்தது. அதனைத் தொடர்ந்து, திருக்கோணமலை அருள்மிகு பத்திரகாளி அம்பாள் திருக்கோயில் மண்டபத்தில் திருவிளக்கேற்றல் மற்றும் அம்பலவாணர் அருள்வழிபாட்டுடன் திருவாதவூரடிகள் திருவம்பலம் ஆரம்பமாகியிருந்தது. தொடர்ந்து தொடக்கவுரை - சிவத்திரு. க. தேவகடாட்சம் (பொருளாளர் - கன்னியா வெந்நீரூற்று சிவன் ஆலயம்), அருள் உரை - தருமை ஆதீன திருச்சி மௌனமட மற்றும் இலங்கை திருக்கேதீச்சர கிளைமட தம்பிரான் தவத்திரு. மீனாட்சி சுந்தரம் சுவாமிகள், தலைமை உரை - சிவத்திரு. வேதாகமணி சோ. இரவிச்சந்திரக் குருக்கள் (திருக்கோணமலை அருள்மிகு பத்திரகாளி அம்பாள் திருக்கோயில் ஆதீனமுதல்வரும், தலைமை பூசகரும்), திருமுறை விண்ணப்பம் - குமாரவயலூர் "திருமுறைக்கலாநிதி" முனைவர். திருஞான பாலச்சந்திரன் ஓதுவார் (தேவார உதவிப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்), சிறப்புரை - தருமை ஆதீனப்புலவர், திருமுறைக்களஞ்சியம், சிவத்திரு. எம்.கே. பிரபாகரமூர்த்தி அவர்கள் (தலைப்பு - " **நாமார்க்கும் குடியல்லோம்**"), நன்றியுரை - சிவத்திரு. க. துஷ்யந்தன் (செயலாளர் - கன்னியா வெந்நீரூற்று சிவன் ஆலயம்) என்ற ஒழுங்கில் நிகழ்வுகள் அரங்கேறி சிறப்பாக நிறைவடைந்திருந்தது.

இப்பெருவிழாவானது திருக்கோணமலை மக்களிடையே ஓர் புதிய அறிமுகமாகவும், தம்பிரான் சுவாமிகள் உட்பட்ட பெரியோர்களின் அருளுரைகள் பெறும் திடலாகவும் அமையப் பெற்றிருந்தது. இப்பெரும் கைங்கரியத்தினை ஒழுங்கமைக்கும் பணியினை கன்னியா வெந்நீர் ஊற்று அறங்காவலர் சபை செயலாளர், சிவத்திரு. க. துஷ்யந்தன் மற்றும் திருக்கோணமலை இராவண சேனை தலைவர், சிவத்திரு. செந்தூரன் ஆகியோர் அவர்களின் குழுவினரின் ஒத்துழைப்போடு ஏற்படுத்தியிருந்தமை போற்றுதலுக் குரியதாகும்.

### மார்கழிப் பெருவிழா - சம்பூர்

திருக்கோணமலை சம்பூர் தமிழ்க் கலாமன்றமும் யாழ்ப்பாணம் தென்னாடு செந்தமிழாகம சிவமடமும் இணைந்து, திருக்கோணமலையின் தென்கிழக்கே சைவத்தமிழ் கிராமமாகத் திகழும் சம்பூர் மண்ணில், மார்கழித் திங்களைச் சிறப்பிக்கும் "மார்கழிப் பெருவிழாவை" நடத்தியிருந்தனர். இப்பெருவிழாவானது, சம்பூர் பண்பாட்டு மண்டபத்தில் மார்கழித் திங்கள் 7ம் நாள் (டிசம்பர் 22) புதன்கிழமை மாலை 4.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை இடம் பெற்றிருந்தது.

திருவாதவூரடிகள் திருவம்பலமானது சம்பூர் பண்பாட்டு மண்டபத்தில், திருவிளக்கேற்றல் மற்றும் அம்பலவாணர் அருள் வழிபாட்டுடன் ஆரம்பமாகியிருந்தது. தொடர்ந்து தொடக்கவுரை - வைத்தியர் சிவத்திரு. அ. ஸதீஸ்குமார் (சம்பூர் தமிழ்க் கலாமன்றம்), தலைமை உரை - சிவத்திரு. ம. சச்சிதானந்தம் (சம்பூர் தமிழ்க் கலாமன்றம்) (அதிபர் - தி / சிறிமுருகன் வித்தியாலயம் - சம்பூர்), அருள் உரை - தருமை ஆதீன திருச்சி மௌனமட மற்றும் இலங்கை திருக்கேதீச்சர கிளைமட தம்பிரான் தவத்திரு. மீனாட்சி சுந்தரம் சுவாமிகள், திருமுறை விண்ணப்பம் - குமாரவயலூர் "திருமுறைக்கலாநிதி" முனைவர். திருஞான பாலச்சந்திரன் ஓதுவார் (தேவார உதவிப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்), சிறப்புரை - தருமை ஆதீனப்புலவர், திருமுறைக்களஞ்சியம், சிவத்திரு. எம்.கே. பிரபாகரமூர்த்தி அவர்கள் (தலைப்பு - **"திருமுறை காட்டும் வாழ்வியல் நன்னெறி"**), நன்றியுரை - சிவத்திரு. செ. திவாகர் (சம்பூர் தமிழ்க் கலாமன்றம்) என்ற ஒழுங்கில் நிகழ்வுகள் அரங்கேறி சிறப்புற நிறைவு பெற்றிருந்தது.

சம்பூரானது வசதிகள் குறைந்த கிராமமாக இருப்பினும் மிக நேர்த்தியான முறையில், வைத்தியர் சிவத்திரு. அ. ஸதீஸ் குமார் (சம்பூர் தமிழ்க் கலாமன்றம்) அவர்களின் முயற்சியால் இப்பெருவிழாவானது நிறைவேறியிருந்தது. சம்பூர் மக்களிடையே இப்பெருவிழாவானது சைவம் தொடர்பான ஓர் தெளிவு படுத்தலையும் புதியதோர் தொடக்கத்தையும் ஏற்படுத்தியிருக்கும் என்பதில் எவ்வித ஐயுறவும் இல்லை.

### மார்கழிப் பெருவிழா - வவுனியா

வவுனியா அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயிலும் யாழ்ப்பாணம் தென்னாடு செந்தமிழாகம சிவமடமும் இணைந்து நடாத்தும் 'மார்கழிப் பெருவிழாவானது', வடக்கே சைவம் வளர்க்கும் இன்னொர் முயற்சியாக, வவுனியா அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில் மண்டபத்தில் நடந்தேறியிருந்தது. இந்நிகழ்வானது, மார்கழித் திங்கள் 8ம் நாள் (டிசம்பர் 23) புதன்கிழமை மாலை 5.30 மணி தொடக்கம் 8.30 மணி வரை திருவாதவூரடிகள் திருவம்பலமாக இடம்பெற்றது.

இப்பெரும் நிகழ்வானது திருவிளக்கேற்றல், அம்பலவாணர் அருள் வழிபாடு என்பவற்றுடன் ஆரம்பமாகியிருந்தது. அதனைத் தொடர்ந்து தொடக்கவுரை - சிவத்திரு. க. ஏ. அருள்செல்வம் (பொருளாளர் - வவுனியா அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில்), அருள் உரை - தருமை ஆதீன திருச்சி மௌனமட மற்றும் இலங்கை திருக்கேதீச்சர கிளைமட தம்பிரான் தவத்திரு. மீனாட்சி சுந்தரம் சுவாமிகள், தலைமை உரை - சிவத்திரு. தமிழ்மணி அகளங்கன், திருமுறை விண்ணப்பம் - குமாரவயலூர் "திருமுறைக்கலாநிதி" முனைவர். திருஞான பாலச்சந்திரன் ஓதுவார் (தேவார உதவிப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்),

**(06ஆம் பக்கம் பார்க்க)**

## வடக்கு, கிழக்கு, மேற்கினை முன்னிலைப்படுத்தி...

**(05ஆம் பக்கத் தொடர்ச்சி)**

சிறப்புரை - தருமை ஆதீனப்புலவர், திருமுறைக்களஞ்சியம், சிவத்திரு. எம்.கே. பிரபாகரமூர்த்தி அவர்கள் (தலைப்பு - **"சமகாலச் சவால்களை எதிர்கொள்ள சைவம் காட்டும் பாதை"**), நன்றியுரை - சிவத்திரு. பா. சுந்தரராஜன் (செயலாளர் - வவுனியா அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில்) என்ற ஒழுங்கில் நிகழ்வுகள் இடம்பெற்று திருவருளுடன் நிறைவடைந்திருந்தது.

வவுனியா மாநகரில் இப்பெரும் பெருவிழாவை, சிவத்திரு. கண்ணன் அவர்களின் ஏற்பாட்டில் வவுனியா அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில் நிர்வாகத்தினர் ஒழுங்கமைத்து சிறப்பாக நடத்தியிருந்தனர். திருக்கோயில் குழுவினரின் அர்ப்பணிப்பே இந்நிகழ்விற்க்கான சிறப்பு என்று போற்றிப் போகலாம்.

### மார்கழிப் பெருவிழா - யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சைவ சித்தாந்த துறையும் தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தின் சைவ மாணவர் சபையும் இணைந்து, இரண்டாம் முறையாக யாழ்ப்பாணத்தில் மார்கழிப் பெருவிழாவை முன்னெடுத்திருந்தனர். இம்மார்கழிப் பெருவிழாவானது, மார்கழித் திங்கள் 10 ஆம் நாள் (டிசம்பர் 25) ஞாயிற்றுக்கிழமை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில், **"தில்லைக்கூத்தன் திருவம்பலம்"**, **"திருவாதவூரடிகள் திருவம்பலம்"** என இரு அரங்கங்களாக இடம்பெற்றது.

இந்நிகழ்வானது, யாழ் பல்கலைக்கழக பரமேசுவரர் திருக்கோயில் வழிபாட்டுடன் ஆரம்பமாகி இருந்தது. அதனைத் தொடர்ந்து திருமுறை வழிபாடு இடம்பெற்று, திருமுறைகள், பெட்டகத்தில் வைத்து, பெரியோர்கள் புடை சூழ ஊர்வலமாக, திருக்கோயிலில் இருந்து கைலாசபதி அரங்கிற்கு எடுத்து வரப்பட்டது.

### காலை அரங்கம் - தில்லைக்கூத்தன் திருவம்பலம்

கைலாசபதி அரங்கில் திருவிளக்கேற்றல் மற்றும் அம்பலவாணர் அருள் வழிபாட்டுடன் **"தில்லைக்கூத்தன் திருவம்பலமானது"** ஆரம்பமாகியது. காலை அரங்கத்தின் முதல் நிகழ்வாக, பேராசிரியர். சி. சிறிசற்குணராசா (துணைவேந்தர் - யாழ். பல்கலைக் கழகம்) அவர்கள் விடைக்கொடி ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து அருள் உரை - தவத்திரு. மீனாட்சி சுந்தரம் தம்பிரான் சுவாமிகள் (தருமை ஆதீன திருச்சி மௌன மட மற்றும் இலங்கை திருக்கேதீச்சர மட தம்பிரான் சுவாமிகள்), தொடக்கவுரை - கலாநிதி. பொன்னுத்துரை சந்திரசேகரம் (தலைவர் - சைவ சித்தாந்தத் துறை, யாழ். பல்கலைக் கழகம்), வாழ்த்துரை - பேராசிரியர். சி. சிறிசற்குணராசா (துணைவேந்தர் - யாழ். பல்கலைக் கழகம்), திருமுறை விண்ணப்பம் - குமாரவயலூர் திருமுறைக்கலாநிதி. முனைவர். திருஞான பாலச்சந்திரன் ஓதுவார் (தேவார உதவிப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்), சிறப்புரை - தருமை ஆதீனப்புலவர், திருமுறைக்களஞ்சியம், சிவத்திரு. எம்.கே. பிரபாகரமூர்த்தி அவர்கள் (தலைப்பு - 'அண்ணலார் உளர் அஞ்சுவது என்னுக்கே') என்ற ஒழுங்கில் நிகழ்வுகள் இடம்பெற்றன. மேலும் காலை அரங்கத்தில், தென்னாடு செந்தமிழாகம சிவமடமும் சைவ மாணவர் சபையும் இணைந்து நடாத்திய திருவாசக கட்டுரைப் போட்டிக்கான பரிசில் வழங்களும் இடம்பெற்றது. வெற்றியாளர்களுக்கான பரிசில்களை நல்லை ஆதீன குருமுதல்வர் அவர்கள் வழங்கி வாழ்த்தியிருந்தார். காலை அரங்க நிறைவைத் தொடர்ந்து அடியார்கள் அனைவருக்கும் அமுது செய்வித்தல் பல்கலைக் கழக சிற்றுண்டிச்சாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

### மாலை அரங்கம் - திருவாதவூரடிகள் திருவம்பலம்

அமுது செய்வித்தலைத் தொடர்ந்து மாலை அரங்கமானது **"திருவாதவூரடிகள் திருவம்பலம்"** என்ற தலைப்பில் ஆரம்பமாகியது. மாலை அரங்கத்தை தென் கயிலை ஆதீன குருமுதல்வர் தவத்திரு. அகத்தியர் அடிகளார் அவர்கள் அருள் உரையுடன் ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து தொடக்க உரை - சிவத்திரு. செந்தமிழாதன் (நிர்வாகச் செயலாளர் - சைவ மாணவர் சபை), வாழ்த்துரை - சிவத்திரு. நல்லையா விஜயசுந்தரம் (தலைமை ஆசிரியர் - வலம்புரி பத்திரிகை), திருமுறை விண்ணப்பம் - குமாரவயலூர் திருமுறைக்கலாநிதி. முனைவர். திருஞான பாலச்சந்திரன் ஓதுவார் (தேவார உதவிப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்), சிறப்புரை - தருமை ஆதீனப்புலவர், திருமுறைக்களஞ்சியம், சிவத்திரு. எம்.கே. பிரபாகரமூர்த்தி அவர்கள் (தலைப்பு - 'எது எமைப் பணிகொளுமாறு அது கேட்போம்') என்ற ஒழுங்கில் நிகழ்வுகள் அரங்கேறியது. சிறப்புரையைத் தொடர்ந்து கொடையாளர்களை சிறப்புச் செய்யும் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது சிவத்திரு. நல்லையா விஜயசுந்தரம் (தலைமை ஆசிரியர் - வலம்புரி பத்திரிகை) மற்றும் சிவன் தொலைக்காட்சியின் யாழ் மாவட்ட மேலாளர் சிவத்திரு. பஞ்சலிங்கம் ஜெனனன் ஆகியோர் தென் கயிலை ஆதீன குருமுதல்வர் தவத்திரு. அகத்தியர் அடிகளார் அவர்களால் பொன்னாடை போர்த்தி சிறப்புச் செய்யப்பட்டனர். தொடர்ந்து நன்றி உரையினை சிவத்திரு. வனராஜ் சசிராஜ் (பொதுச் செயலாளர் - சைவ மாணவர் சபை) அவர்கள் நிகழ்த்த, கடவுள் வாழ்த்துடன் நிகழ்வானது சிறப்பாக நிறைவடைந்திருந்தது.

சைவ மாணவர் சபையினராகிய இளையோர்கள் அனைவரும் இணைந்து, யாழ் பல்கலைக்கழக சித்தாந்தத் துறையின் ஒத்துழைப்போடு யாழ்ப்பாணத்தில் இவ்விழாவை நடாத்தி இருந்தனர். இளையோர்கள் என்றும் சளைத்தவர்கள் அல்ல என்பதை உணர்த்திக் காட்ட இவ்விழா உதாரணமாக அமைந்திருந்தது. இவ்வாறான இளையோர்களின் முயற்சியை தருமையாதீன தம்பிரான் சுவாமிகளும் பாராட்டி கூறியிருந்தார்.

இவ்வாறாக யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு, திருகோணமலை, சம்பூர் என ஐந்து இடங்களில் அடுத்தடுத்த நாட்களாக மார்கழிப் பெருவிழா சிறப்பாக நிறைவடைந் திருந்தது. இன்றைய சமூகத்தினரிடையே சைவப்பற்றானது அழிந்து போகவில்லை, மறைந்து போயுள்ளது. ஆகையால் இன்றைய இளையோர்கள் மத்தியில் சைவத்தை போதிப்பதற்கு ஆட்கள் தேவையில்லை, ஊக்குவிப்பாளர்கள் இருந்தால் போதும், அவர்கள் சைவத்தை அருமையாக போற்றிப் பரவுவார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக இவ்விழாக்கள் அமைகின்றது.

சைவத்தையும் சிவத்தையும் சிந்தை முழுவதுமாகக் கொண்டு, கடல் கடந்து கங்காரு தேசம் தன்னில் வாழ்ந்தாலும், எந்நாளும் ஈழம் நோக்கிய முனைப்பையுடைய அடியார் பெருமகனார் ஒருவருடைய சைவப்பற்றும், சிவம் நோக்கிய சிந்தையின் முனைப்பும், வழிகாட்டுதலுமே, ஒன்றாய் அரும்பி இன்று பலவாய் விரிந்து நடக்கின்ற மார்கழிப் பெருவிழாக்களுக்கு மூலமாக அமைகின்றது. இம்மார்கழிப் பெருவிழா பயணமானது இன்னும் தொடரவேண்டும். அடுத்த வருடம் இன்னும் பலரின் ஆதரவோடு, பல இடங்களில் இவ்விழாக்கள் இடம்பெற வேண்டுமென்று தென்னாடு பதி உறை ஐம்பூதநாதப் பெருமானிடம் விண்ணப்பம் வைப்போமாக.

**"ஊரெல்லாம் சிவாலயம் உரையெல்லாம் நால்வர்பாட்டு"**


**திருச்சிற்றம்பலம்**

**தொகுப்பு - சிவத்திரு. தென்னாடு நிலவன்**

# மார்கழிப் பெருவிழா - 2022

**(20-12-2022) - கொழும்பு மார்கழிப் பெருவிழா**








**(21-12-2022) - திருக்கோணமலை மார்கழிப் பெருவிழா**








**(22-12-2022) - சம்பூர் மார்கழிப் பெருவிழா**







**(23-12-2022) - வவுனியா மார்கழிப் பெருவிழா**







# மார்கழிப் பெருவிழா - 2022



(25-12-2022) - யாழ்ப்பாணம் மார்கழிப் பெருவிழா

# திருக்கோணமலை சைவத்தமிழ் பாடசாலைகளில், தருமை ஆதீன தம்பிரான் தவத்திரு. மீனாட்சி சுந்தரம் சுவாமிகள் தலைமையில் மாணவர்களுக்கான சைவம் தொடர்பான தெளிவுபடுத்தல் அருளுரைகள் இடம்பெற்றன

இறைவன் திருவருளோடு நிறைவடைந்துள்ள மார்கழிப்பெருவிழாவிற்காக, திருக்கோணமலை மண்ணிற்கு வருகை தந்திருந்த, தருமை ஆதீன திருச்சி மௌனமட மற்றும் இலங்கை திருக்கேதீச்சர கிளைமட தம்பிரான் தவத்திரு. மீனாட்சி சுந்தரம் சுவாமிகள், அவர்களோடு தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்திருந்த, குன்றத்தூர் தருமையாதீனப் புலவர், **“திருமுறைக்களஞ்சியம்”**, சிவத்திரு. எம்.கே. பிரபாகரமூர்த்தி அவர்களும், குமாரவயலூர் **“திருமுறைக்கலாநிதி”**, முனைவர். சிவத்திரு. திருஞான பாலச்சந்திரன் ஓதுவார் (தேவார உதவிப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்) அவர்களும் இத்திருவருள் பயணத்தில் இணைந்து சிறப்புரைகள், திருமுறை விண்ணப்பங்களை வழங்கி மாணவச் செல்வங்களை திருவருள் வெள்ளத்தில் திளைக்கச் செய்திருந்தனர்.

அதனடிப்படையில் சண்முகா மகளிர் இந்துக் கல்லூரி, செல்வநாயகபுரம் இந்துக் கல்லூரி, திருமலை இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் இந்நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. தம்பிரான் சுவாமிகள் மாணவர்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தும் பொருட்டு மிக அழகாக அருளுரைகளை வழங்கியிருந்தார். தொடர்ந்து பிரபாரகரமூர்த்தி ஐயா அவர்கள் மாணவர்கள் தற்காலத்தில் எதிர்கொள்கின்றசவால்கள்பற்றியும்மாணவர்களிடையேயான சந்தேகங்களைத் தீர்க்கும் முகமாகவும் தெளிவுபடுத்தலை ஏற்படுத்தி இருந்தார். மேலும் பாலச்சந்திரன் ஓதுவார் அவர்கள் குறுகிய நேரத்தில் மிக அழகாக தேவார பயிற்சி பட்டறைகளை நடாத்தி திருமுறைத் தேனை வழங்கியிருந்தார்.

இவ்வாறு மூன்று ஆன்றோர்களும் ஒருங்கே இணைந்து, மூன்று பாடசாலைகளிலும் மாணவர்கள் மத்தியில் சிறப்பான புரிதலையும் சைவம் தொடர்பான ஆர்வத்தையும் ஏற்படுத்தியிருந்தார்கள். இவ்வாறான அரும்பெரும் நிகழ்வுகளானது, சிவத்திரு. துஷ்யந்தன் அவர்களின் ஒழுங்கமைப்பில் அதிபர்களினுடைய ஒத்துழைப்பிலேயே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மேலும் திருக்கோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரி மங்களநாதர் திருக்கோயிலுக்கும் தருமையாதீன தம்பிரான் சுவாமிகள் சென்று வழிபாடு ஆற்றியிருந்தார்கள்.

**“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”**

**திருச்சிற்றம்பலம்**

## திருக்கோணமலை சைவத்தமிழ் பாடசாலை நிகழ்வுகள் - (22-12-2022)



சண்முகா மகளிர் இந்துக் கல்லூரி - திருக்கோணமலை



செல்வநாயகபுரம் இந்துக் கல்லூரி - திருக்கோணமலை




உவர்மலை விவேகானந்தா கல்லூரி - திருக்கோணமலை



திருமலை இந்துக் கல்லூரி - திருக்கோணமலை

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று:

# எம்பிரான் திருஞானசம்பந்தன்



## ஆண் பனைகள் காய்த்த அதிசயம்

பிள்ளையார் தொண்டை மண்டலத்துக்கு யாத்திரை செய்யத் திருவுளங்கொண்டு, தோணியப்பரை வணங்கி விடை பெற்றுக் கொண்டு, அடியார்களோடு புறப்பட்டு, தம்மோடு உடன்வருவதற்குத் துணிந்த தந்தையராகிய சிவபாதவிருதயரை நோக்கி, **“அப்பரே நீர் இங்கே தானே யாகஞ் செய்து சிவனருள் வழிபாடு பண்ணிக் கொண்டிரும்”** என்று சொல்லிச் சென்று, சிதம்பரம், திருத்தினைநகர், திருமாணிக்குழி, திருப்பாதிரிப்புலியூர், திருவடுகூர், திருவக்கரை, திருவிரும்பைமா காளம், திருவதிகை, திருவாமாத்தூர், திருக்கோவலூர், திருவறையணி நல்லூர், திருவண்ணாமலை என்னுந் தலங்களை வணங்கிக் கொண்டு தொண்டை நாட்டை அடைந்தார்.

அங்கே திருவோத்தூரிற் சென்று, இறைவனை வழிபாடு செய்துகொண்டு எழுந்தருளியிருந்தார். இந்நாளிலே, அந்தத் தலத்திலே உள்ள சிவனடியார் ஒருவர் வந்து, பிள்ளையாரை வணங்கி நின்று, **“சிவம் தன்னைப் போற்றிச் சைவத்தை நிலைகொள்ளச் செய்தருளும் எம்பெருமானே! மெய்க்கடவுளாகிய பரமசிவனுக்கு அடியேன் ஆக்கும் பனைகளெல்லாம் மிக உயர்வாக வளர்ந்தும் ஆண்பனைகளாகிக் காயாவாயின. அதுகண்ட சமணர்கள் நீர் ஆக்கும் ஆண்பனைகளெல்லாவற்றையும் காய்க்கப் பண்ணுதல் கூடுமோ என்று நகை செய்து இகழ்கின்றார்கள். தேவரீர் நீரே திருவருள் செய்ய வேண்டும்”** என்று விண்ணப்பம் செய்தார்.

பிள்ளையார் அது கேட்டு உளமுருகி, எழுந்து விரைந்து திருக்கோயிலிற்சென்று, சுவாமியை வணங்கி, **“பூந்தொத்தாயின”** என்னும் திருப்பதிகம் பாடி, அத்திருப்பதிகத்தின் திருக்கடைக்காப்பிலே **“குரும்பையாண்பனை யீன்குலை யோத்தூர்”** என்று அருளிச் செய்தார். அதனால் ஆண்பனைகளெல்லாம் குரும்பைக் குலைகளையுடையனவாய்ப் பெண்பனைகளாயின. அதனைக் கண்டவர்களெல்லாரும் ஆச்சரியங்கொண்டார்கள். பிள்ளையார் ஆண்பனைகள் காய்த்துப் பழுக்கும்படி அன்பருக்கு அருள் செய்து, சுவாமியை வழிபாடு செய்து கொண்டு அங்கே எழுந்தருளியிருந்தார். சமணர்கள் பரசமயகோளரியாராகிய பிள்ளையாருடைய செய்கையைக் கண்டு, அந்நாட்டைவிட்டு ஓடினார்கள். அவர்களிற் சிலர் பரமசிவனே மெய்க்கடவுள் என்று துணிந்து, சைவர்களாகி உய்ந்தார்கள். பிள்ளையாருடைய திருவாக்கிலே பிறத்தலால் அப்பனைகளெல்லாம் தங்கள் காலத்தைக் கழித்து, ஒழியாப் பிறவியை ஒழித்துச் சிவத்தை அடைந்தன.

## பூம்பாவையைப் பிழைத்தெழச் செய்தல்

மயிலாப்பூரில் வணிகர் குலத்தில் எல்லையில் செல்வம் உடையவராய் செம்மையே புரிமனத்தினராய் வணிகர் குலத்தில் சிவநேசன் என்னும் அடியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் சைவ சமயமே மெய்மைச் சமயம் என்பதையும், அறிந்த பெரியவர். அவர் ஞானசம்பந்தரது பெருமைகளைக் கேள்வியுற்று அவர்பால் எல்லையில்லாத பேரன்புடையராயினார். அவருக்கு ஒரு பெண் மகவு இருந்தாள். அழகிற் சிறந்த அப்பெண்ணுக்குப் **“பூம்பாவை”** எனப் பெயரிட்டார்.

அப்பெண்ணும் மணப்பருவம் எய்திய நிலையில் இருந்தாள். ஞானசம்பந்தர் மதுரை சென்று பரசமயம் நிராகரித்துப் பாண்டி நாட்டில் சைவ சமயத்தை நிலைநிறுத்தி வந்த செய்தி கேட்டு ‘என்னையும், என்மகளையும் என் செல்வத்தையும் அவருக்கே உடமையாக்கினேன்’ என மொழிந்தார். இந்நிலையில் ஞானசம்பந்தருக்கு உரியள் என, சிவநேசர் மொழிந்திருந்த பூம்பாவை, பூஞ்சோலையில் மலர் பறிக்கச் சென்றபோது அரவு தீண்டி இறந்தாள். சிவநேசர் மிகவும் வருந்தியவராய் அப்பெண்ணை உயிருடன் ஒப்புவிக்கும் புண்ணியம் அமையவில்லை. ஆயினும் அவள் உடலைத் தகனம் செய்து, எலும்பையும் சாம்பலையும் ஒரு மட்குடத்திலிட்டு, அதையேனும் ஒப்புவிப்போம் என்று பேணிவந்தார். ஞானசம்பந்தர் திருவொற்றியூர் வழிபாடு முடித்து மயிலாப்பூருக்கு எழுந்தருளும் செய்தி கேட்டு வரவேற்க எதிரே வந்தார். ஞானசம்பந்தரைக் கண்டு வணங்கிய அளவில் உடன் வந்த அடியார்கள் அவரை அறிமுகம் செய்ததோடு, அவள் மகள் இறந்த செய்தியையும் அவரிடம் கூறினர்.

ஞானசம்பந்தர் மயிலாப்பூருக்கு எழுந்தருளி வழிபாடாற்றிப் புறத்தே போந்தவர் சிவநேசரை அழைத்து, அவர் மகளின் என்பு நிறைந்த குடத்தினை எடுத்து வரச் செய்து, அக்குடத்தை இறைவன் திருமுன்னே வைக்கச் செய்து **“மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும் அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல் என்பது உண்மையாயின் உலகவர் முன் இப்பூம்பாவை உயிர் பெற்று எழுந்து வருவாளாக”** எனக்கூறி இறைவனை வேண்டிப் பூம்பாவைத் திருப்பதிகமாகிய,

**“மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்**
**கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்**
**ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்**
**கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.”** எனும் திருப்பதிகம் பாடியருளினார்.

பூம்பாவைத் திருப்பதிகத்தின் பத்தாவது பாடல் பாடலடியாகிய, **“இரும் சாக்கியர்கள் எடுத்துரைப்ப நாட்டில் கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சரத்தான்றன் பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்.”** என்று பாடிய அளவில் செந்தாமரையில் வீற்றிருக்கும் திருமகள் போல அப்பெண் உலகவர் வியக்க, உயிர் பெற்றுக் குடம் உடைய வெளிப்பட்டு, ஞானசம்பந்தரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினாள்.



ஞானசம்பந்தர் திருப்பதிகத்தின் பதினொன்றாவது பாடலைப் பாடி நிறைவு செய்தார். சிவநேசர் ஞானசம்பந்தரை வணங்கித் திருவருளைப் போற்றினார். தன் திருமகளைத் திருமணம் புரிந்து ஏற்றருள வேண்டுமென வேண்டினார்.

ஞானசம்பந்தர் மறை நெறி மரபை அவருக்கு உணர்த்தியதோடு, பூம்பாவையை யாம் மீண்டும் உயிர்ப்பித்தோம் ஆதலின் அவள் எமக்கு மகளாவாள் எனக்கூறிய அளவில் சிவநேசர் மனத் தெளிவுற்று, அப்பெண்ணை வேறொருவர்க்கு மணம் முடிக்க மனமின்றிக் கன்னிமாடத்தே இருக்கச்செய்தார். பின்னர் பூம்பாவையும் சிவன் அருளையே சிந்தித்துச் சிவனடி கூடினார்.

**திருச்சிற்றம்பலம்**

மூலம் - திருஞானசம்பந்தர் வாழ்வியல் அற்புதங்கள்
- டாக்டர் சு. உமாமகேஸ்வரி

சிவத்திரு. தென்னாடு நிலவன்
தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
+94 (70) 770 1111 | nilavan@thennadu.org

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு அல்லியங்கோதை உடனுறை தியாகராசர் (புற்றிடங்கொன்றார்) திருக்கோயில் - திருவாரூர் (திருமூலட்டானம்)

## (தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 87ஆவது திருக்கோயில் - திருவாரூர்)



**(சென்ற திங்கள் தொடர்ச்சி)**

### திருத்தலச் சிறப்பு


திருவாரூர் சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களுள் எண்பத்தேழாவது ஆகும். இவ்வூர் மிகப் பழமைவாய்ந்தது. இச்செய்தியை **"திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ திருவாரூர் கோயிலாக் கொண்டநாளே"** என்னும் அப்பர் சுவாமிகள் தேவாரப் பகுதியால் அறியலாம். இவ்வூரில் பூங்கோயில், அரநெறி, பரவையுண்மண்டளி என்னும் மூன்று பாடல் பெற்ற கோயில்கள் இருக்கின்றன. இவற்றுள் புற்றிடங்கொண்டார் (வன்மீகநாதர்) எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலே பூங்கோயில் எனப் பெயர்பெறும். இதுவே திரு மூலட்டானம் எனவும் வழங்கப்பெறும். இதற்கு முப்பத்துநான்கு பதிகங்கள் இருக்கின்றன.

அரநெறி, நமிநந்தி அடிகள் நாயனார் தண்ணீரால் திருவிளக் கேற்றி வைத்து வழிபட்ட திருக்கோயிலாகும். இச்செய்தியைத் திருநாவுக்கரசு பெருந்தகையார் இவ்வூர்த் திருவிருத்தத்தில் **"நம்பி நந்தி நீரால் திருவிளக்கிட்டமை நீணாடறியுமன்றே"** எனச்சிறப்பித்துள்ளனர். இது, கோயில் திருவிசைப்பாப் பதிகம் பாடிய கண்டராதித்த சோழதேவரது மனைவியாராகிய செம்பியன் மாதேவியாரால் கட்டப்பெற்ற கற்றளியை உடையது. இதற்கு அப்பர் அருளிய பதிகங்கள் இரண்டு உள்ளன. இக்கோயில் இரண்டாம் வீதியில் மேற்குமுகமாக இருக்கின்றது.

பரவையுள் மண்டளி, பரவைநாச்சியார் தமது மாளிகையின் ஒரு பகுதியில் மண்ணால் சிறுகோயில் கட்டி, அதில் இறைவனை எழுந்தருளுவித்து நாளும் வழிபட்ட கோயிலாகும். இது சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பாடப்பெற்ற சிறப்புடையது. இது தெற்குக் கோபுரத்திற்கு அண்மையில் இருக்கின்றது. ஒருகாலத்தில் வருணன் இந்நகர் மீது அனுப்பிய கடலை உண்டமையால் இத்தலத்துக்குப் பரவையுண் மண்டளி என்னும் பெயரெய்தியது என்றும் கூறுபவர்.

ஆக, இத்தலத்திற்கு முப்பத்தேழுபதிகங்களும், வேறு திருமுறைகளில் பல பாடல்களும் இருக்கின்றன. இத்தலத்தின் தேரும், திருவிழாவும், திருக்கோயிலும், திருக்குளமும் இவ்வூர்த் தேவாரங்களில் வைத்துப் பாடப்பெற்றுள்ளன. திருக்குளமும் திருக்கோயிலும், செங்கழுநீர் ஓடையும் தனித்தனி ஐந்துவேலிகள் பரப்புடையன. பிறக்க முத்திதருவது, தியாகேசர் எழுந்தருளிய ஏழுவிடங்கத் தலங்களுள் முதன்மைபெற்றது. ஐம்பெரும் பூதத்தலங்களில் இது மண் தலமாகும். திருமகளால் பூசிக்கப் பெற்றது. இங்குள்ள தேவாசிரிய மண்டபத்திலிருந்த அடியவர்களைக் கண்டுதான் சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகையை அருளினார். அவர் விருத்தாசலத்தில் மணிமுத்தாநதியில் இட்ட பொன்னை மிகப்பெரிய கமலாலயம் என்னும் திருக்குளத்திலிருந்து எடுத்துப் பரவையார்க்குக் கொடுத்த பழம்பதி இதுவேயாகும்.

அவர் பொருட்டுப் பரவை நாச்சியாரிடம் சிவபெருமான் இருமுறை நள்ளிரவில் தூது நடந்து சென்ற திருவீதியை உடையது. இச்செய்தியை **"அடியேற்கு எளிவந்த தூதனை"** என்னும் அவரது தேவாரப் பகுதி உறுதிப்படுத்தும். காஞ்சிபுரத்தில் ஒருகண் பெற்ற அவர் **"மீளா அடிமை"** என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடி மற்றொரு கண்பார்வையும் பெற்றது, இத்தலத்தில்தான். நமிநந்தி அடிகள், செருத்துணை நாயனார், தண்டியடிகள் நாயனார், கழற்சிங்க நாயனார், விறன்மிண்ட நாயனார் இவர்கள் முத்திபெற்றதும் இப்பதியிலேதான். இத்தலம் சோழமன்னர்கள் முடிசூட்டிக்கொள்ளும் தலங்கள் ஐந்தனுள் ஒன்றாகும். ஒருகுலத்துக்கு ஒருமகன் உள்ளான் என்பதையும் ஓராது ஓரான்கன்றுக்காகத் தன் மகனது உயிரைப் போக்கிய



மனுநீதிச் சோழன் ஆண்டதும் இப்பதியேதான்.

**"திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்"** என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாய்மலர்ந்து அருளியிருப்பதால் இப்பதியின் பெருமையை அளவிடுவார் யார்? இதை விரிப்பின் அகலும். தொகுப்பின் எஞ்சும். பெரியபுராணத்திலுள்ள திருவாரூர்ச் சிறப்பு என்னும் பகுதி படித்து இன்புறுதற் குரியதாகும்.

**திருவாதிரைத் திருவிழா:** பழங்காலத்தில் இவ்விழா பெருஞ் சிறப்புடன் கொண்டாடப்பட்டு வந்தது. அவ்விழாவை அப்பர் சுவாமிகள் கண்டுகளித்து, அதன் சிறப்பை **"முத்து விதானம்"** என்று தொடங்கும் ஒரு தனித் திருப்பதிகத்தினால் ஞானசம்பந்தப் பெருந்தகையார்க்குக் கூறியருளியிருக்கிறார்கள்.

**பங்குனி உத்திரத் திருவிழா:** இது மாசித் திங்கள் அத்தம் நாண்மீன் நாளில் கொடியேறி, பங்குனி உத்திர நட்சத்திரத்தில் தீர்த்தம் நடைபெறும், திருவிழாவாகும். இவ்விழா நினைவிற்கு வரவே ஒற்றியூரிலிருந்த சுந்தரமூர்த்தி நாயனார் சூளுறவையும் மறந்து, திருவாரூர்க்குப் புறப்பட்டார் என்று பெரியபுராணம் செப்புகின்றது. அதனால் இவ்விருவிழாக்களும் பழங்கால முதல் நடந்துவரும் சிறப்புடையனவாதலை நன்கறியலாம்.

பூங்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவரின் திருப்பெயர்கள் வன்மீகநாதர், புற்றிடங்கொண்டார், திருமூலட்டான நாதர். இறைவியாரின் திருப்பெயர் அல்லியம்பூங்கோதை அம்மை. யோக நிலையில் தனிக்கோயிலில் கமலாம்பிகையாக எழுந்தருளியுள்ளார்.

மார்கழித் திருவாதிரையும் பங்குனி உத்திரமும் இவரை வழிபடற்குரிய சிறந்த நாள்கள் என்று அறிஞர்கள் உரைத்துள்ளனர். இவர் எழுந்தருளியிருக்கும் இடம் தேவசபை என்றும், இவருக்குத் தென்றல் காற்றுவரும் கல்சன்னல் திருச்சாலகம் என்றும், இவருக்குரிய கொடி தியாகக்கொடி என்றும், இவருடைய தேருக்கு ஆழித்தேர் என்றும், இவரை எழுந்தருளப்பண்ணும் பிள்ளைத் தண்டுகள் திருவாடுதண்டு, மாணிக்கத்தண்டு என்றும் பெயர் பெற்றுள்ளன.

இவர் சந்நிதியில் நந்திதேவர் நின்ற திருக்கோலத்தில் உள்ளார். இத்தலத்து வழிபாட்டுக் காலங்களுள் திருவந்திக் காப்பு மிக்க விசேடமுடையது. இவருடைய நடனம் அஜபாநடனம், புயங்க நடனம் எனப் பாராட்டப்படும். சீர்வளர் கமலை ஞானப்பிரகாச சுவாமிகள் தருமை ஆதீனத்தை நிறுவிய சீர்வளர் குருஞான சம்பந்தருக்கு உபதேசம் செய்த அருள்மிகு சித்தீச்சுரம் திருக்கோயில், ஆலயத்தின் வடபால் உள்ளது. தலவிநாயகர் வாதாபிவிநாயகர். கமலாலயத்தின் வடகிழக்கு மூலையில் மாற்றுரைத்த பிள்ளையாரின்



திருக்கோயில் இருக்கின்றது.

**1. திருவாரூர் மும்மணிக்கோவை:-** இது அறுபான் மும்மை நாயன்மார்களுள் ஒருவராகிய சேரமான் பெருமாள் நாயனாரால் இயற்றப்பெற்றது. பதினோராந் திருமுறையில் உள்ள நூல்களுள் ஒன்றாய் விளங்கும் சிறப்புடையது.

**2. கமலாலயச் சிறப்பு:-** இது சிதம்பரம் மறைஞான சம்பந்தரால் இயற்றப்பெற்றது.

**3. திருவாரூர்ப் புராணம்:-** நிரம்ப அழகியதேசிகருடைய மாணாக்கராகிய அளகைச் சம்பந்தர் என்பவரால் செய்யப்பெற்றது.

**4. திருவாரூர் உலா:-** அந்தகக்கவி வீரராகவ முதலியாரால் இயற்றப்பெற்றது.

**5. தியாகராச லீலை:-** திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்றது. இது முற்றுப்பெறாத நிலையில் உள்ளது.

**6. திருவாரூர் நான்மணிமாலை:-** இதை அருளியவர் குமரகுருபர சுவாமிகள்.

**7. தியாகராசப் பள்ளு:-** இதை ஆக்கியோர் பதினாறாம் நூற்றாண்டில் விளங்கியிருந்த கமலைஞானப்பிரகாசர் ஆவர்.

**8. திருவாரூர்ப் பன்மணிமாலை:-** இலக்கண விளக்கம் இயற்றிய திருவாரூர் வைத்தியநாததேசிகரால் ஆக்கப்பெற்றது.

**9. திருவாரூர் ஒரு துறைக்கோவை:-** இது வெறிவிலக்கு என்னும் ஒரு துறையை வைத்துக்கொண்டு நானூறு பாடல்களால் ஆக்கப்பெற்றதொரு நூல். இதன் ஆசிரியர் கீழ்வேளூர்க் குருசாமி தேசிகர் என்பர்.

**10. திருவாரூர்க் கோவை:-** இது எல்லப்ப நயினார் என்னும் புலவரால் பாடப்பெற்ற சொற்சுவை பொருட்சுவை நிரம்பிய நூல்.

**11. கமலாம்பிகை பிள்ளைத்தமிழ்:-** தருமை ஆதீனத்து அடியார் கூட்டங்களில் ஒருவராய் விளங்கியிருந்த சிதம்பர முனிவரால் இயற்றப்பெற்றது.

இவைகளன்றித் திருவாரூர் மாலை, கமலாம்பிகை மாலை, முதலான நூல்களும், காளமேகப்புலவர் முதலானோரின் தனிப் பாடல்களும் இருக்கின்றன.

**"திருமகள் தவஞ்செய் செல்வத் திருவாரூர் பணிவ னென்னா**
**ஒருவனே முடிந டந்து மீண்டிடின் ஒப்பில் காசி**
**விரிபுனற் கங்கை யாடி மீண்டவ னாவனென்றால்**
**இருடிகாள் ஆரூர் மேன்மை பிரமற்கு மியம்ப வற்றோ."**

-திருவாரூர்ப் புராணம்.

### திருவாரூர் ஆழித்தேர்

**"திருவாரூர்த் தேரழகு"** என்னும் உலக வழக்கு இவ்வூர்த்



தேரின் சிறப்பைத் தெரிவிப்பதாகும். **"ஆழித்தேர் வித்தகனை நான் கண்ட தாரூரே"** என்பது அப்பர் தம் வாக்கு. ஆசியாவிலயே மிகப் பெரிய தேர் திருவாரூர் ஆழித்தேர் ஆகும்.

ஒவ்வொரு ஆண்டும் பங்குனித் திங்கள் நடைபெறும் தேர்த்திருவிழா மிகவும் பெயர் பெற்றது. **"திருவாரூர் தேரழகு"** என்று சிறப்பிட்டுச்சொல்லும் அளவிற்கு புகழ் பெற்றது. இத்திருவிழாவில் கலந்து கொள்ளும் பத்தர்களும் பொதுமக்களும் தேரினைக் கோயிலைச் சுற்றி உள்ள வீதிகளில் இழுத்து வருவார்கள்.

1000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நடைப்பெற்ற தேர்த் திருவிழா, 1927 ஆம் ஆண்டு ஆழித்தேரோட்டத்தின் போது தேர் முற்றிலும் எரிந்துவிட்டது. நின்றுபோன தேர்த் திருவிழா, பிறகு 1930 ஆம் ஆண்டு புதிய தேர் உருவாக்கப்பட்டு மீண்டும் தேரோட்டம் 1948 ஆம் ஆண்டு வரை நடைபெற்றது. பின்வந்த காலங்களில் தடைப்பட்ட தேரோட்டம் 1970 ஆம் ஆண்டு மு. கருணாநிதி மற்றும் வடபாதிமங்கலம் தியாக ராஜ முதலியார் முயற்சியால் நடைபெறத் தொடங்கியது.

வீதிவிடங்கனின் பிரம்மாண்டமான ஆழித்தேரின் உயரம் 96 அடி ஆகும். இது வீதிவிடங்கன் 96 தத்துவங்களைக் கடந்தவன் என்று குறிக்கிறது. தேரின் மேல் பகுதி கமலவடிவமாக காட்சி அளிக்கும்.

### திருத்தல வரலாறு

திருமால் மன்னுமாமலராளோடு (இலக்குமி) பிள்ளைப் பேறு வேண்டி சிவபெருமானைப் பூசிக்க சிவபெருமான் தியாகேசர் திருமேனியை அளித்தார். திருப்பாற்கடலில் திருமால் இத்தல இறைவர் தியாகராசரைத் தமது மார்பில் (இருதய கமலத்தில்) வைத்துப் பூசித்தார். திருமாலின் மூச்சினால் அவர் மார்பின் ஏற்ற இறக்கங்களில் இறைவர் நடமாடினார். பின் இம்மூர்த்தத்தை இந்திரன் வரமாகப் பெற்று பூசித்தார் அதன்பின் முசுகுந்தச் சக்கரவர்த்திக்கு இந்திரனால் வழங்கப்பெற்றது. (இத்துடன் வழங்கப்பட்ட மேலும் ஆறு தியாகராச மூர்த்தங்கள் நிறுவப்பட்ட தலங்களுடனே இவை ஏழு (சப்த) விடங்கத் தலங்கள் எனப்படும்.)

### திருக்கோயில் அமைப்பு

33 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள, மிகவும் அற்புதமான இக்கோயிலில், 9 இராச கோபுரங்கள், 80 விமானங்கள், 12 பெரிய மதில்கள், 13 மிகப்பெரிய மண்டபங்கள், 15 தீர்த்தக்கிணறுகள், 3 பூந்தோட்டங்கள், 3 பெரிய வீதிகள், 365 இலிங்கங்கள் (இவை வருடத்தின் மொத்த நாட்களை குறிப்பதாக சொல்கிறார்கள்), 100க்கும் மேற்பட்ட சன்னதிகள், 86 விநாயகர் சிலைகள், 24க்கும் மேற்பட்ட உள் கோயில்கள் அமைந்துள்ளன. இந்தக் கோயிலை சுற்றிப் பார்க்கவே, முழுமையாக ஒருநாள் ஆகும்.

**"அறைகழல் இறைஞ்சும் ஆரூர் அப்பனே போற்றி"**

**திருச்சிற்றம்பலம்**

சிவத்திரு. தென்னாடு நிலவன்
தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
+94 (70) 770 1111 | nilavan@thennadu.org

# சிவபூமியில் சிவனைத் தேடி

## மட்டுநகர் நாவற்குடாவில் நாகர் நிறுவிய சிவன் கோயில்



மட்டக்களப்பு நகரிலிருந்து 4 கிலோமீற்றர் தூரத்தில் கல்லடியை அண்டியதாக தென்மேற்கில் நாவற்குடா என்னும் ஊர் அமைந்துள்ளது. இவ்வூர் மண்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ளது. கிழக்கில் சமுத்திரத்தையும் மேற்கில் வாவி ஆற்றையும் தொட்டு நிற்கும் இவ்வூரில் காட்டுப்பிள்ளையார் சிவன் கோயில் என்று இச் சிவாலயம் பெயர் பெற்று விளங்குகின்றது. கிழக்கிலங்கையில் 2000 வருடங்களுக்கு மேலான வரலாறு கொண்ட நாவற்குடாவில் அமைந்துள்ள நாகரின் பண்பாட்டுச் சின்னங்கள் பலவற்றைக் கொண்ட சிவன் கோயில் என்ற உண்மை இங்கு சென்று வழிபட்டு வருவோர்கள் அறிந்திராத ஓர் புதுமையான விடயமாகும்.

### மட்டக்களப்பில் இயக்கர், நாகர்களின் இருப்பு நிலை

இலங்கையின் பூர்வீகக் குடிகள் இயக்கர், நாகர் என மகாவம்சம் போன்ற நூல்களில் குறிப்புக்கள் இருந்தாலும், மட்டக்களப்பு தேசத்தில் இக்குடிகள் ஆதிகாலத்தில் நிலை கொண்டிருந்தனர் என்பதற்கு நீண்டகாலமாக வாய்மொழி ரீதியாக பேசப்பட்டு வந்த கதைகளைக் உள்ளடக்கிய 'மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்' என்ற நூலைத் தவிர இயக்கர், நாகர்களைப் பற்றிய உறுதியான தொல்லியல் சான்றுகள் எவையும் எவருக்குமே கிட்டவில்லை. மற்றும் அவ் ஆய்வுகள் தொடர்பான ஆழமான அறிவும் மட்டக்களப்பு பற்றிய வரலாறு பல எழுதிய பலருக்கும் புரியாத புதிராக இருந்து வந்த நிலையில், **"கிழக்கிலங்கையில் நாகரும் தமிழரும் (கி.மு 250- கி.பி 300)"** என்ற நூல் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் பதிப்பாசிரியராகக் கொண்டு 2016 இல் வெளிவந்தது. இந் நூல் கிழக்கிலங்கைக்கு மட்டுமன்றி, இலங்கைத் தமிழர் வரலாற்றிலும், மகாவம்சக் கட்டுக் கதைகளை தவிடு பொடியாக்கிய சரித்திர நூலாக அனைவராலும் பார்க்கப்பட வேண்டியதாகிறது.

இதுவரை காலமும் மட்டக்களப்பு மான்மியத்தில் கூறப்பட்டு வந்த சில சரித்திரங்கள் புனைக்கதைகளாகவே சரித்திர ஆய்வாளர்களால் பார்க்கப்பட்டு வந்த சூழ்நிலையில் மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தில் வரும்,

**"கலிகடந் தெண்ணூ றாண்டில் கருதிய இலங்கை**
**தன்னில் வலியவரியக்க ரோடு கலந்தவர் மரபொன்**
**றாகி நலிவில்லா நிருபஞ் செய்து நகரெலா மிறைக**
**ளென்ன ஒலி வள ருகந்த மென்னும் நகரதி லுறைந்தார் நகர்"**

என்ற பதிவில் நாகர் இயக்கரோடு கலந்து ஒரே சமூகமானார்கள். எல்லா நகரங்களிலும் ஆட்சி புரிந்தார்கள். உகந்தையில் அவர்கள் கூடி வாழ்ந்தார்கள் என்ற விடயங்கள் அந்நாளில் புனைக்கதையாகவே பார்க்கப்பட்டது. ஆனால் இவற்றை உண்மைப்படுத்தும் சான்றாக மட்டக்களப்பு தேசத்தில் கி.மு 500 ஆண்டுகள் முதலாக இவ்விரு சமூகத்தினரும் ஒன்றாய்க் கலந்து வாழ்ந்துள்ளனர் என்பதற்கு கதிரவெளி, வாகரை, பாலாமடு, உகந்தை, பாணமை, செட்டிப்பாளையம் முதலான இடங்களில் கிடைத்துள்ள பெருங்கற்பண்பாட்டுச் சின்னங்களும், தமிழ்ப் பிராமிச் சாசனங்கள் காணப்படுகின்ற வெல்லாவெளி, மாவடி வேம்பு, வந்தாறுமூலை, குசலான்மலை, நாவற்குடா, களுவாஞ்சிக்குடி, காரைதீவு, சங்கமன் கண்டி போன்ற இடங்களும் சான்றுரைக்கின்றன.

குறிப்பாக மட்டக்களப்பு பூர்வ சரித்திரத் தகவலின் படி இயக்கரும், நாகரும் மட்டு தேசத்தின் பூர்வீகக் குடிகள் என்றும் அவர்களில் நாகர்கள் இயக்கர்களோடு கலப்புற்று வலிமை பெற்று, அதன் காரணமாக அரசுகளை உருவாக்கினார்கள் என்றும் சொல்லப்படுகின்றது. இதற்கு மட்டக்களப்பின் பல பாகங்களிலும் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட தொல்பொருட்சின்னங்கள் ஆதாரமாய் உள்ளன.

பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் குறிப்பிடுகையில், **"கி.மு மூன்றாம் நூற்றாண்டளவில் நாகரின் குடியேற்றங்களும் செல்வாக்கும் எழுவான் கரையிலும் படுவான் கரையிலும் பரவியிருந்தன"** என்கின்றார்.

குடும்பிமலை, கல்லடிச்சேனை, பாலாமடு, வெல்லாவெளி, கிரான், வந்தாறுமூலை, நாவற்குடா போன்ற தலங்களில் கிடைத்துள்ள தமிழ்ப்பிராமிச் சாசனங்களில் **"வேள்"** என்ற பதம் உபயோகிக்கப்பட்டுள்ளது. இங்கு வேள் என்பது கருத்து நிலையில் **"ராஜா"** என்ற பிராகிருத மொழிச் சொல்லுக்குச் சமமானது. அது ஓர் சிற்றரசனைக் குறிக்கும் என்று கூறப்படுகின்றது. பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் வேள் என்பது நாகர்களின் பதவிப்பெயராகவும், பதவி சாசனங்களில் எழுதப்பட்ட காலத்தில் சந்தான வழிப் பரம்பரைப் பெயராகவும் வந்திருக்கலாம் என்று குறிப்பிடுகின்றார். நாவற்குடா சிவன் கோயில் தூண் கல்வெட்டொன்றில் **"வேள்ணாகன் மகன் வேள் கண்ணன்"** என்ற தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட வாசகம் அக்கருத்தையே சுட்டுவதாக அமைகின்றது.

இதே போன்ற வாசகம் மட்டக்களப்பு தேசத்தில் ஏறத்தாள 10 இடங்களில் காணப்படுகின்றது. அத்துடன் நாகர் குலத்து ஆட்சியாளன் வாழுகின்ற இருப்பிடம் **"வேள்ணாகன் பள்ளி"** என்ற பெயரால் சாசனங்களில் பொறிக்கப்பட்டுள்ளது. இதனை வந்தாறு மூலை, வெல்லாவெளி, ஏறாவூர், கல்லடிச்சேனை, களுவாஞ்சிக்குடி, நாவற்குடா ஆகிய இடங்களில் கண்டு கொள்ளலாம். மற்றும் இன்னும் சில சாசனங்களில் **"மணிணாகன் பள்ளி"** என்ற நாகரின் வழிபாட்டுத்தலம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. நாகரின் சமய நெறி நாகவழிபாடு ஆகும். அது ஐந்து தலை நாகமாகும். இவ் வழிபாட்டுக்குரிய நாகத்தை **"மணிநாகன்"** என்று குறிப்பிட்டனர். நாகர்களிடையே சைவசமயச் செல்வாக்கு மெல்ல மெல்ல ஏற்படத் தொடங்கிய காலத்தில் மணிநாகன் பள்ளிகள் சைவக்கோயில்களாக மாற்றமடைந்தன.

### நாவற்குடா சிவன் கோயில்

கிழக்கிலங்கையில் குறிப்பாக மட்டக்களப்பு தமிழகத்தில் கிறிஸ்து யுகம் தொடக்கமாகிய காலகட்டத்தில் சைவசமயமும் அதன் வழிபாட்டு அம்சங்களும் தொடங்கி விட்டன



என்பதற்கு நாவற்குடா சிவன்கோயில் ஒரு முன்மாதிரியான கோயில் என்று கூறுவதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. காரணம் இக் கோயில் வளாகத்தில் காணப்படும் 16க்கு மேற்பட்ட கருங்கற் தூண்கள். அதில் பொறிக்கப்பட்டுள்ள தமிழ்ப்பிராமி எழுத்துக்கள், நாகபந்த வடிவங்கள் என்பன நாகர்களின் வழிபாட்டுக்குரிய கோயில் என்பதை அண்மைக்கால ஆய்வுகள் மூலம் எமக்கு தெரியப்படுத்திக் கொண்டு இருக்கின்றன.



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

தென்னிந்தியாவில் நாகர் வழிபாட்டுக்குரிய கோயில் இருந்தமையை சிலப்பதிகாரத்தில் வரும் **"அமரர் தருக்கோட்டம், வெள்யானைக் கோட்டம், புகார் வெள்ளை நாகர் கோட்டம்"** என்பது நாகர் அமைத்த வழிபாட்டு இடம் என்று கொள்ள இடமுண்டு. ஆனால் இலங்கையில் நாகரின் வழிபாட்டு இடம் **"மணிணாகன் பள்ளி"** என்ற பெயரால் பல சாசனங்களில் பொறிக்கப்பட்டுள்ளது. நாவற்குடாவில் அமைந்துள்ள சிவன் கோயிலின் தெற்குப்புறம் அமைந்துள்ள பெரிய ஆலமரத்தின் அடிப்பக்கம் 16 கருங்கற் தூண்கள் காணப்படுகின்றன. அவற்றுள் 4அடி நீளமும் 1 அடி அகலமும் கொண்ட கற்தூண் ஒன்றிலே நாகபந்த வடிவங்களும், **"மணிணாகன் பள்ளி"** என்ற பெயரும் பொறிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து இப்போது புதிதாக அமைந்துள்ள கோயிலுக்கு முன்பே நாகரின் வழிபாட்டுக் கோயில் ஒன்று அமைந்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் எக்கடவுளை வணங்கினார்கள் என்பதற்கு எவ்விதமான தடயங்களும் இன்னும் அங்கு கிட்டவில்லை பெரும்பாலும் நாகவழிபாடு இடம் பெற்றிருக்க வாய்ப்பிருக்கிறது. ஏனென்றால் கோயிலின் கதவுகள் பொருத்தப்படும் கற்றூண்கள் இரண்டின் அடிப்பாகத்தில் நாகவடிவங்கள் தெரிகின்றன.

மற்றும் ஓரடி நான்கு அங்குல நீளமும், ஓரடி அகலமுடைய பெரிய கற்துண்டம் ஒன்றில் **"வேள்ணாகன் மகன் வேள் கண்ணன்"** என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இது நாக மன்னர்களின் தலைமுறைகளிலுள்ள அம்மன்னர்களின் பட்டப் பெயர்களாகும். எனவே நாவற்குடாவில் தலைமுறை தலைமுறையாக நாகரின் ஆட்சி நிலவியமைக்கும் அங்கு அவர்கள் கோயில் அமைத்து வழிபாடு செய்தமைக்கும் இக் கற்தூண் உறுதியான அத்தாட்சியாகும்.

இங்கு வசித்து வரும் மூத்தோர்களைச் செவ்வி கண்ட போது, ஆரம்பகாலத்தில் கருங்கல், சுண்ணாம்பு கற்களைப் பாவித்துக் கட்டப்பட்ட ஓர் ஆலயம் இருந்ததாகவும், அவ் ஆலயம் மீள் கட்டுமானம் செய்யும் போது, அவற்றில் உள்ள பெரும்பாலான கற்கள் சிதலமடைந்து விட்டதாகவும், இன்னும் சிலவற்றை பொதுமக்கள் தங்களது பாவனைக்கு எடுத்துச் சென்று விட்டதாகவும் கூறினர். பின்னர் இவ்விடத்திற்கு கொல்லி மலையிலிருந்து ஒரு சித்தர் வருகை தந்ததாகவும். அவரின் அருள்வாக்கில் **"இவ்விடத்தில் ஓர் சிவாலயம் உண்டாக்குக"** என்று கூறியதன் படி முன்பு இருந்த ஆலயத்தின் எஞ்சிய கற்தூண்களைக் கொண்டும் செங்கற்களினால் இறையகம், அதன் முன்னால் ஒரு மண்டபம் ஒன்றும் கட்டப்பட்டது. இதுவும் கட்டப்பட்டு ஏறத்தாள 300 வருடங்களிற்கு மேலாகியும் ஆலயம் முழுமை பெறாத நிலையில் தற்போது அவ் ஆலயத்தையும் அழித்து புதிய சிவாலயம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகின்றது.

புதிய சிவன் ஆலயம் இறையகம், அர்த்தமண்டபம், பெரு மண்டபம், பரிவாரத் தேவர்கோட்டங்கள், மணித் தூண் கோபுரம், ஆகிய பகுதிகளைக் கொண்டு கிழக்கு நோக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது. அர்த்த மண்டபத்தின் மேல் தளம் அகலமும் நீளமும் சமமாக உள்ள கருங்கற் தூண்கள் இடப்பட்டு அவை, சீமெந்துக் கலவையினால் பூசி மெழுகப்பட்டிருக்கின்றது. அக் கருங்கற்களிலும் நாகரின் இருப்பு தொடர்பான ஆதாரங்கள் பொறிக்கப்பட்டிருக்க வாய்ப்புண்டு. அர்த்த மண்டபத்தின் தெற்குப் புறவாசலில் 5 அடி நீளமும் 2 அடி அகலமுடைய கருங்கற்பலகை ஒன்று காணப்படுகின்றது அதில் **"மணிணாகன்"** என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல் ஒரு வழிபாட்டுச் சின்னமாக பயன்படுத்தியிருக்கலாம். என நம்பப்படுகின்றது.

தற்போது இக் கோயில் காட்டுப்பிள்ளையார் சிவன் கோயில் என்ற பெயராலேயே அழைக்கப்பட்டு வருகின்றது. பண்டைய காலத்தில் நாகர்களின் வழிபாட்டு இடமாக இருந்த நாவற்குடா பின்பு நாகர்களிடையே சைவசமயச் செல்வாக்கு மேலோங்கிய கால ஓட்டத்தில் சிவலிங்க வழிபாடு, பிள்ளையார் வழிபாடு என்பனவும் அவர்களால் போற்றப்பட்டன என்பதற்கு இக் கோயிலின் பெயரே சான்றாக விளங்குகின்றது.

மட்டக்களப்பு நகரின் எழுவான் கரைப்பிரதேசத்தில் நாகர்களின் சமயப் பண்பாட்டு அடையாளங்களுக்குச் சான்றாக அதிகமான தொல்பொருட் சின்னங்களை கொண்ட கோயிலாக நாவற்குடா சிவன் கோயில் விளங்குகின்றது. இதனால் இதன் சிறப்பை உணர்ந்து இங்குள்ள கிராமத்தவரும் கோயிலாரும் அவற்றை அழியாது பேணிப்பாதுகாக்க முன்வரல் வேண்டும்.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

**திருச்சிற்றம்பலம்**

# தென்னாட்டு நிகழ்வுகள்

(07-12-2022) - கார்த்திகைத் திங்கள் தீபத்திருநாள் வழிபாடும், நிறைமதி வெளியீடும்





(06-01-2023) - மார்கழித் திங்கள் நிறைமதி வழிபாடு



(26-12-2022) - தென்னாடு கற்றளிக்கோயிலாக உருப்பெற வேண்டி திருமுறை விண்ணப்பம் ஆரம்பம்



(06-01-2023) - ஆதிரை அருட்காட்சி வழிபாடும் திருவீதி உலாவும்



(01-01-2023) - சாவகச்சேரி வாரிவனேசுவரர் திருக்கோயிலின் இரண்டாம் ஆண்டு நிறைவு சங்கு நீராட்டு



(01-01-2023) - யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை மங்களநாதர் திருக்கோயிலில் திருவாசக முற்றோதல்

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் இருபத்து எட்டாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு சுறவம் நல்லோரை தைத் திங்கள் 5ம் நாள் பதின்மும்மைப் பிறைநாள் அன்று (19-01-2023 வியாழக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி , தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம்.. சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 221 2739 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org